SAKTHI MARKETING
வாடிக்கையாளர்களின் நன் மதிப்பை பெற்ற நிறுவனம்
பெட்ரோல், டீசல், சர்வோ ஆயில் சில்லரை விற்பனை நிலையம்
IndianOil
#41/B, Sabanayagar Street, Chidambaram-1.
Ph: 04144-223177, Cell: 98423 35007

மாலை எக்ஸ்பிரஸ்
MAALAI EXPRESS
மாநிலம் பயனுற!
குரோதி வருடம் மாசி 28
ஹிஜிரி 1446 ரமலான் 11
Email: maalaiexpresspdy@gmail.com
Website: www.maalaiexpress.com
/maalaiexpressnews
● புதுச்சேரி ● புதன்கிழமை, மார்ச் 12, 2025 ● வெளியீடு: 13-3-2025, வியாழக்கிழமை RNI.REG.NO.PONBIL/2015/68788 ● Volume - 10 ● Issue - 236 ● 8 பக்கம் ● ரூ.6

மல்டிகலர் பைகள்
துணிக்கடை, நகைக்கடை, திருமண மற்றும் சுபவிசேஷங்களுக்கு அனைத்து விதமான மாடல்களிலும் சிறந்த முறையில் பைகள் தைத்துதரப்படும்.
தொடர்புக்கு:- 98423 35007

# 2025-2026ம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கை தாக்கல்

# அரசு, அரசு உதவி பெறும் பள்ளி மாணவர்களுக்கு மாலை சிற்றுண்டி திட்டம்

## இருமொழிக் கொள்கையையே தமிழ்நாடு விரும்புகிறது: அமைச்சர் அன்பில் மகேஷ்

**சென்னை, மார்ச் 12–**


பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி வெளியிட்டுள்ள எக்ஸ் தளப்பதிவில் கூறப்பட்டிருப்பதாவது:

மத்திய கல்வி மந்திரி தர்மேந்திர பிரதான் அவர்களே... தமிழ்நாட்டில் 1.09 கோடி மாணவர்கள் 58,779 பள்ளிகளில் மாநில பாடத்திட்ட கல்வியை தேர்வு செய்துள்ளனர். 1,635 சிபிஎஸ்இ பள்ளிகளில் 15.2 லட்சம் மாணவர்கள் மட்டுமே மும்மொழியை படிக்கின்றனர். 3வது மொழியை படிக்க அவசியம் இருந்தால், ஏன் இவ்வளவு பேர் மாநில பாடத்திட்டத்தை தேர்வு செய்துள்ளனர். ? தமிழ் என்பது மொழி மட்டுமல்ல, அது எங்களின் ஆணி வேரோடு ஒன்றாக கலந்ததும் கூட.தமிழ்நாட்டின் கல்விமுறை ஏற்கனவே சிறந்த தொழில்முனைவோர், சிந்தனையாளர்கள், கண்டுபிடிப்பாளர்களை உருவாக்கி வருகிறது. சிறப்பாக உள்ள தமிழ்நாட்டின் கல்விமுறையை தேசிய கல்விக் கொள்கை சீர்குலைக்கிறது. ஆங்கில வழிப் பள்ளிகளில் கூட, தமிழ்நாட்டில் உள்ள ஒவ்வொரு மாணவரும் தமிழை ஒரு பாடமாகப் படித்து அதில் திறமையானவர்கள். நமது பெருமைக்கு தமிழ், உலக வழிகாட்டியாக ஆங்கிலம் நமது முன்னேற்றம் மற்றும் சமத்துவத்திற்கான பாதை.

மாணவர்கள் ஏற்கனவே வலுவான இருமொழி அடித்தளத்துடன் சிறந்து விளங்கும்போது, தமிழ்நாட்டிற்கு கட்டாய 3ம் மொழி தேவையில்லை. இருமொழிக் கொள்கையையே தமிழ்நாடு விரும்புகிறது. தமிழ்நாட்டின் கல்வி முறை சிறப்பாக உள்ளது. தேசிய கல்விக்கொள்கையில் தமிழ்நாட்டின் நிலைப்பாட்டை விமர்சிப்பது தவறான வழிநடத்துதலாகும்.

கல்வி மற்றும் வேலைவாய்ப்பில் தமிழ்நாடு பாடத்திட்டம் மிகச் சிறந்த பலனை அளித்துள்ளது. உடைந்ததை ஒட்ட வைக்க நினைக்காதீர்கள்; நன்றாக செயல்படும் தமிழ்நாட்டின் கல்வி அமைப்பை மாற்ற வேண்டாம். இது மொழி பற்றியது மட்டுமல்ல முடிவுகளை வழங்கும் கல்வி முறையைப் பாதுகாப்பது பற்றியது. மாணவர்களுக்கு எது சிறந்தது என்பதில் தமிழ்நாடு சமரசம் செய்யாது. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## திருச்சி: பெல் நிறுவன அலுவலகத்திற்குள் பொதுமேலாளர் துப்பாக்கியால் சுட்டு தற்கொலை



**திருச்சி, மார்ச் 12–**

திருச்சி மாவட்டம் திருவெறும்பூர் பகுதியில் மத்திய அரசின் பொதுத்துறை நிறுவனமான ‘பெல்’ இயங்கி வருகிறது. இந்நிறுவனத்தில் தமிழகம் மற்றும் வெளி மாநிலத்தை சேர்ந்த சுமார் 7,000 பேர் வேலை செய்து வருகின்றனர். இந்நிலையில் பெல் நிறுவனத்தின் ஒரு பிரிவில் பொது மேலாளராக பணியாற்றி வந்த சண்முகம் (வயது 50) என்பவர் வழக்கம் போல பணிக்கு வந்திருந்த நிலையில் மாலை வீடு திரும்பவில்லை.

பல இடங்களில் அவருடைய குடும்ப உறுப்பினர்கள் மற்றும் உறவினர்கள், காணாமல் போன சண்முகத்தை தேடி வந்தனர். அப்பொழுது அலுவலகத்தில் உள்ள அவருடைய அறைக்குச் சென்ற பொழுது அவருடைய அறை உள்பக்கமாக தாழிடப் பட்டிருந்தது. இதனால் அதிர்ச்சியடைந்த அவர்கள் அறைக் கதவை உடைத்துச் சென்று உள்ளே பார்த்தும் அதிர்ச்சி அடைந்தனர். சண்முகம் கையில் துப்பாக்கியுடன் சோபாவில் உயிரிழந்து கிடந்தார். உடனடியாக ‘பெல்’ காவல்துறைக்கு தகவல் கொடுக்கப்பட்ட நிலையில் அங்கு வந்த போலீசார் உடலை மீட்டு பிரேதப் பரிசோதனைக்கு அனுப்பி வைத்துள்ளனர். தற்கொலைக்கான காரணம் குறித்தும், அவருக்கு எப்படி துப்பாக்கி கிடைத்தது என்பது குறித்தும் போலீசார் தீவிரமாக விசாரித்து வருகின்றனர். போலீசாரின் முதற்கட்ட விசாரணையில் துப்பாக்கிக்கு உரிமம் இல்லை என்பது தெரிய வந்துள்ளது.

## தமிழகத்தில் 21 மாவட்டங்களுக்கு மழைக்கு வாய்ப்பு

**சென்னை, மார்ச் 12–**

தமிழக கடலோரப்பகுதிகளை ஒட்டிய தென்மேற்கு வங்கக்கடல் பகுதிகளின் மேல் ஒரு வளிமண்டல கீழடுக்கு சுழற்சி நிலவுகிறது. இதன் காரணமாக இன்று தென்தமிழகத்தில் ஒருசில இடங்களிலும், வடதமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும், இடி, மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்திருந்தது.

இந்த நிலையில் தமிழகத்தில் 21 மாவட்டங்களில் மதியம் 1 மணி வரை மழை பெய்ய வாய்ப்புள்ளது என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. அதன்படி, மயிலாடுதுறை, திருவாரூர், நாகப்பட்டினம், தஞ்சாவூர், புதுக்கோட்டை, ராமநாதபுரம், சிவகங்கை, விருதுநகர், கன்னியாகுமரி, திருநெல்வேலி, தூத்துக்குடி மற்றும் தென்காசி ஆகிய மாவட்டங்களில் லேசான இடி, மின்னலுடன் கூடிய மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், திருவள்ளூர், சென்னை, செங்கல்பட்டு, காஞ்சிபுரம், விழுப்புரம், கடலூர், அரியலூர், திருச்சிராப்பள்ளி மற்றும் மதுரை ஆகிய மாவட்டங்களில் லேசான இடி, மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மக்கள் சந்திப்பு முகாம்




சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், மானத்தாள் ஊராட்சியில் மக்கள் சந்திப்பு முகாம் மாவட்ட ஆட்சித்தலைவர் பிருந்தாதேவி தலைமையில் நடைபெற்றது. உடன் மேட்டூர் வருவாய் கோட்டாட்சியர் (பொ) லோகநாயகி.

## புதுச்சேரி பட்ஜெட்டில் அறிவிப்பு




**புதுச்சேரி, மார்ச் 12–**

புதுச்சேரி சட்டப்பேரவையில் 2025–2026ம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கை இன்று தாக்கல் செய்யப்பட்டது. அம்மாநிலத்தில் நிதித்துறை பொறுப்பில் உள்ள முதலமைச்சர் ரங்கசாமி தாக்கல் செய்தார். பட்ஜெட்டில் ரூ.13,600 கோடிக்கு நிதிநிலை அறிக்கையை தாக்கல் செய்து, முதலமைச்சர் ரங்கசாமி உரையாற்றினர்.

அப்போது அவர் அறிவித்த முக்கிய அறிவிப்புகள் கீழ்வருமாறு, விவசாய தொழிலாளர்களுக்கு மழைக்கால நிவாரணமாக ரூ. 2 ஆயிரம் வழங்கப்படும். குடும்ப அட்டைதாரர்களுக்கு வழங்கப்படும் இலவச அரிசியுடன், இரண்டு கிலோ இலவச கோதுமை வழங்கப்படும். அரசு மற்றும் அனைத்து அரசு உதவி பெறும் பள்ளி மாணவர்களுக்கும் மாலை சிற்றுண்டி வழங்கப்படும். பள்ளி மாணவர்களுக்கு வாரம் மூன்று நாள் மட்டும் வழங்கப்படும் முட்டை, இனிமேல் தினந்தோறும் வழங்கப்படும். 6 முதல் 12ம் வகுப்பு வரை அரசு பள்ளிகளில் படித்து உயர்கல்விக்கு செல்லும் மாணவ மாணவிகளுக்கு மாதந்தோறும் ரூ.1,000 ஊக்கத் தொகை வழங்கப்படும். புதுச்சேரி மத்திய சிறைச்சாலை முழுமையாக கணினி மயமாக்கப்படும். எம்.எல்.ஏ. தொகுதி மேம்பாட்டு நிதி ரூ.2 கோடியில் இருந்து ரூ.3 கோடியாக உயர்த்தப்படும். மீனவ சமுதாய பெண்கள் உயிரிழந்தால் ஈமச்சடங்குகளுக்காக வழங்கப்பட்டு வரும் நிதி ரூ.15 ஆயிரத்தில் இருந்து ரூ.25 ஆயிரமாக உயர்த்தி வழங்கப்படும். மீனவர்களுக்கு ஆழ்கடல் மீன்பிடி படகு 50 சதவீதம் மானிய விலையில் வழங்கப்படும்.

ஸ்ரீ ராம் மார்கெட்டிங்
தங்க நகை விற்க (அ) மறு அடகு வைக்க
இன்றைய மார்க்கெட் விலைக்கு விற்று தரப்படும்
செல்: 87606 61133, 87606 61199

## திருச்செந்தூரில் மாசி திருவிழா தேரோட்டம் கோலாகலம்: ஆயிரக்கணக்கான பக்தர்கள் தரிசனம்





**திருச்செந்தூர், மார்ச் 12–**

தமிழ் கடவுள் முருகப்பெருமானின் அறுபடை வீடுகளில் 2ம் படைவீடான திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி கோவிலில் மாசித் திருவிழா கடந்த 3ந் தேதி கொடியேற்றத்துடன் தொடங்கி நடைபெற்று வருகிறது. 9ம் திருநாளான நேற்று அதிகாலையில் கோவில் நடை திறக்கப்பட்டு, விஸ்வரூப தீபாராதனை நடந்தது. தொடர்ந்து மற்ற கால பூஜைகள் நடைபெற்றன.

காலையில் மேலக்கோவிலில் இருந்து சுவாமி அலைவாயுகந்த பெருமானும், குமரவிடங்க பெருமானும் தனித்தனி வெள்ளி குதிரையில் எழுந்தருளி பாளையங்கோட்டை ரோட்டில் உள்ள வேட்டை வெளி மண்டபத்தில் திருக்கண் சாத்தியபின் 8 வீதிகளிலும் உலா வந்து மீண்டும் மேலக்கோவில் சென்றனர். நேற்று இரவு குமரவிடங்கபெருமான் சுவாமி தங்க கயிலாய பர்வத வாகனத்திலும், தெய்வானை அம்பாள் வெள்ளி கமல வாகனத்திலும் எழுந்தருளி 8 வீதிகளிலும் உலா வந்து பக்தர்களுக்கு அருள்பாலித்தனர்.

மாசித் திருவிழாவின் சிகர நிகழ்ச்சியான 10ம் திருநாள் தேரோட்டம் இன்று கோலாகலமாக நடைபெற்று வருகிறது. இதையொட்டி அதிகாலை 5 மணிக்கு கோவில் நடை திறக்கப்பட்டு, காலை 5.30 மணிக்கு விஸ்வரூப தீபாராதனையும், காலை 6 மணிக்கு உதய மார்த்தாண்ட அபிஷேகமும் நடந்தது. காலை 7 மணிக்கு விநாயகர் தனித்தேரிலும், குமரவிடங்கபெருமான் சுவாமி, வள்ளி தெய்வானை அம்பாள்களுடன் பெரிய தேரிலும், தெய்வானை அம்பாள் தனித்தேரிலும் எழுந்தருளினர்.

“முருகனுக்கு அரோகரா... கந்தனுக்கு அரோகரா... வேலனுக்கு அரோகரா” என்ற கோஷங்கள் முழங்க பக்தர்கள் தேரை வடம்பிடித்து இழுத்து வருகின்றனர். வெளி வீதி நான்கிலும் பவனி வந்து பக்தர்களுக்கு அருள்பாலிக்கின்றனர். இதில் ஆயிரக்கணக்கான பக்தர்கள் கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்து வருகின்றனர். மேலும் தேரோட்டத்தை முன்னிட்டு நெல்லை, தூத்துக்குடி, கன்னியாகுமரி மாவட்டங்கள் மற்றும் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்து திரளான பக்தர்கள் கோவிலில் குவிந்து உள்ளனர். விழாவிற்கான ஏற்பாடுகளை கோவில் தக்கார் அருள்முருகன், இணை ஆணையர் ஞானசேகரன் மற்றும் கோவில் பணியாளர்கள் செய்துள்ளனர்.

11ம் திருநாளான நாளை (வியாழக்கிழமை) மாலையில் மேலக்கோவிலில் இருந்து குமரவிடங்கபெருமான் சுவாமியும், தெய்வானை அம்பாளும் சன்னதி தெருவில் உள்ள யாதவர் மண்டபத்திற்கு எழுந்தருளுகின்றனர். அங்கு சுவாமிக்கும், அம்பாளுக்கும் அபிஷேகம், அலங்காரமாகி தீபாராதனை நடக்கிறது. பின்னர் சுவாமி, அம்பாள் புஷ்ப சப்பரங்களில் எழுந்தருளி வெளிவீதி வழியாக நெல்லை நகரத்தார் தெப்பக்குளம் மண்டபம் சேர்கிறார்கள். அங்கு இரவு அபிஷேகம், அலங்காரமாகி சுவாமி அம்பாளுடன் தெப்பத்தில் எழுந்தருளி 11 முறை சுற்றும் தெப்ப உற்சவம் நடக்கிறது.

12ம் திருநாளான நாளை மறுநாள் (வெள்ளிக்கிழமை) மாலையில் சுவாமி, அம்பாள் மஞ்சள் நீராட்டு திருக்கோலத்துடன் எட்டு வீதிகளிலும் உலா வருகிறார்கள். இரவு சுவாமியும், அம்பாளும் தனித்தனி மலர் கேடய சப்பரத்தில் எழுந்தருளி வீதி உலா வந்து கோவிலை சேர்கிறார்கள்.

# செயல்முறை ஆணைகள் வழங்கல்



வேலூர் மாவட்ட ஆட்சித்தலைவர் சுப்புலெட்சுமி, வேலூர் மாவட்டத்தில் மினி பேருந்துகளை இயக்குவதற்கு ஒரே வழித்தடத்திற்கு ஒன்றுக்கு மேல் பெறப்பட்ட விண்ணப்பங்களுக்கு குலுக்கல் முறையில் தேர்வு செய்த 14 நபர்களுக்கு செயல்முறை ஆணைகள் வழங்கினார்.

# சமுதாய நலக்கூடம் திறப்பு





தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் சாமிநாதன் மற்றும் மனித வள மேலாண்மைத்துறை அமைச்சர் என்.கயல்விழி செல்வராஜ் ஆகியோர் திருப்பூர் மாவட்டம், தாராபுரம் ஊராட்சி ஒன்றியம், கவுண்டச்சிபுதூர் ஊராட்சி, கொண்டரசம்பாளையத்தில் சமுதாய நலக்கூடத்தை திறந்து வைத்தார்கள்.

# அரசின் சாதனைகள் புகைப்படக்கண்காட்சி



தூத்துக்குடி மாவட்டம் சாத்தான்குளம் ஊராட்சி ஒன்றியம் பண்டாரபுரம் கிராமத்தில் தமிழக அரசின் சாதனைகள் மற்றும் சிறப்புத் திட்டங்கள் குறித்து செய்தி மக்கள் தொடர்புத்துறையின் சார்பில் வைக்கப்பட்டிருந்த புகைப்படக்கண்காட்சியினை பொதுமக்கள் பார்வையிட்டனர்.

# அரசு அலுவலர்கள் ஆய்வுக் கூட்டம்



தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் சமூகப் பொறுப்பு நிதியின் கீழ் தூத்துக்குடி மாவட்டத்தில் மேற்கொள்ளப்படவிருக்கும் பணிகள் குறித்து அரசு அலுவலர்களுடனான ஆய்வுக் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் இளம்பகவத் தலைமையில் நடைபெற்றது.

## தலையங்கம்

மாலை எக்ஸ்பிரஸ்
12.3.2025 (புதன்கிழமை)

# தொகுதி மறுவரையறை பிரச்னை

அனைத்து மாநிலங்களிலும் ஒரு பிரச்சினை என்றால், அது நடக்கப்போகும் தொகுதி மறுவரையறைதான். 1971ம் ஆண்டு எடுக்கப்பட்ட மக்கள்தொகை அடிப்படையில், 1978ம் ஆண்டு நாடாளுமன்ற மக்களவை உறுப்பினர்களின் எண்ணிக்கை 543ஆக நிர்ணயிக்கப்பட்டது. இந்த தொகுதி வரையறை 2001ம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பு வரை எந்த மாற்றமும் செய்யக்கூடாது என்று அப்போதே சட்டமும் நிறைவேற்றப்பட்டது. அந்த கணக்குப்படி தமிழ்நாட்டில் 39 எம்.பி.க்களும், புதுச்சேரியில் ஒரு உறுப்பினரும் இருக்கிறார்கள்.

இந்த சூழ்நிலையில் 2001ம் ஆண்டுக்கு பிறகு தொகுதி வரையறையும் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டது. ஆனால் அப்போதே தமிழ்நாடு உள்பட பல மாநிலங்கள் அன்றைய பிரதமர் வாஜ்பாயிடம், ‘நாங்கள் எல்லாம் மக்கள்தொகையை கட்டுப்படுத்துவதில் பெரும் வெற்றி கண்டிருப்பதால் இப்போது அதன் அடிப்படையில் தொகுதி வரையறை செய்தால், எங்கள் மாநிலங்களின் நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை குறையும்’ என்று முறையிட்டனர். இந்த கோரிக்கையின் நியாயத்தை ஏற்றுக்கொண்ட வாஜ்பாய் தொகுதி வரையறையை 2026ம் ஆண்டு வரை தள்ளி வைக்கும் வகையில், சட்டத்திருத்தம் நிறைவேற்றினார். அதனால்தான் மக்களவை உறுப்பினர்களின் எண்ணிக்கை இதுவரை 543 ஆகவே நிலைத்து இருக்கிறது.

கடந்த 2023ம் ஆண்டு நாடாளுமன்றத்தின் புதிய கட்டிடம் திறக்கப்பட்டது. அதில் மக்களவை இருக்கைகள் 888 இருந்தது. இதற்கு காரணமாக எதிர்காலத்தில் மக்களவை உறுப்பினர்களின் எண்ணிக்கை அதிகரிக்கக்கூடும் என்று தகவல் கூறப்பட்டது. அதாவது கொரோனா காரணமாக 2021 ம் ஆண்டு நடத்தப்பட வேண்டிய மக்கள்தொகை கணக்கெடுப்பை நடத்தவும், அதன் அடிப்படையில் அடுத்த 2026ம் ஆண்டு தொகுதி வரையறை மேற்கொள்ளவும் மத்திய அரசாங்கம் முடிவு செய்துள்ளது. மக்கள்தொகை அடிப்படையில் உறுப்பினர்களின் எண்ணிக்கை முடிவு செய்யப்பட்டால் குடும்ப கட்டுப்பாடு திட்டத்தை திறமையாக நிறைவேற்றி மக்கள்தொகையை கட்டுப்படுத்திய தமிழ்நாடு உள்பட தென் மாநிலங்களில் உறுப்பினர்கள் எண்ணிக்கை குறையும். அதே வேளையில், குடும்ப கட்டுப்பாடு திட்டத்தை சரிவர நிறைவேற்ற தவறியதால் மக்கள்தொகை அதிகமாக இருக்கும் உத்தரபிரதேசம், பீகார் போன்ற பல மாநிலங்களுக்கு எம்.பி.க்களின் எண்ணிக்கை அதிகரிக்கும் என்பதால் பலத்த எதிர்ப்பு கிளம்பியது.

இந்த எதிர்ப்பின் முதல் குரலாக முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் ஒலித்தார். அவர் கூட்டிய அனைத்து கட்சி கூட்டத்தில் 58 தலைவர்கள் கலந்துகொண்டு, தொகுதி மறுவரையறையை இன்னும் 30 ஆண்டுகளுக்கு ஒத்திவைக்கவேண்டும், தொகுதி மறுவரையறை தொடர்பாக தென் மாநிலங்களின் எம்.பி.க்களை கொண்ட கட்சிகளின் பிரதிநிதிகள் அடங்கிய ‘கூட்டு நடவடிக்கைக் குழு’ அமைக்கவேண்டும் என்பது உள்பட 7 தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன. அதன் தொடர்ச்சியாக சென்னையில் 22ந் தேதி கூட்டுக்குழு ஆலோசனை நடத்த 6 மாநில முதல்மந்திரிகளுக்கும் மற்றும் பல அரசியல் கட்சி தலைவர்களுக்கும் முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின் அழைப்பு விடுத்துள்ளார். தொகுதி மறுவரையறை பிரச்சினைக்கு அமெரிக்கா, அனைத்து நாடுகளுக்கும் நல்ல விடையை தந்து இருக்கிறது. அங்கு கடந்த 112 ஆண்டுகளில் 4 மடங்கு மக்கள்தொகை அதிகரித்து இருந்தாலும், தேர்ந்தெடுக்கப்படும் மக்கள் பிரதிநிதிகளின் எண்ணிக்கை கூட்டாட்சி தத்துவத்தை நிலைநிறுத்தும் வகையில் மாற்றப்படவே இல்லை. அதே உறுப்பினர்களின் எண்ணிக்கைதான் தொடர்கிறது. இந்த தத்துவத்தை இந்தியாவும் பின்பற்றினால் எந்த மாநிலத்துக்கும், எந்த பாதிப்பும் வராது.

# ஆலம்பூண்டி ஸ்ரீரங்க பூபதி இன்டர்நேஷனல் பள்ளியில் பட்டமளிப்பு விழா



செஞ்சி, மார்ச் 12–

விழுப்புரம் மாவட்டம்செஞ்சி அடுத்த செயல்பட்டு வரும் ஆலம்பூண்டி ஸ்ரீரங்க பூபதி இன்டர்நேஷனல் (சிபிஎஸ்சி) பள்ளியில் மழலையர்களுக்கான ஆண்டு பரிசளிப்பு விழா, மற்றும் பட்டமளிப்பு விழா வெகுச்சிறப்பாக நடைபெற்றது. இதில் ஸ்ரீரங்க பூபதி கல்வி குழுமத்தின் தாளாளர் வழக்கறிஞர் ஸ்ரீ ரங்க பூபதி மற்றும் இயக்குனர் சாந்தி பூபதி தலைமையேற்று குத்துவிளக்கேற்றி விழாவை துவக்கி வைத்தனர். ஸ்ரீரங்க பூபதி கல்வி குழுமத்தின் செயலாளர் வழக்கறிஞர் ஆர்பி ஸ்ரீபதி மற்றும் பள்ளியின் இயக்குனர் திருமதி சரண்யா ஸ்ரீபதி முன்னிலை வகித்தனர். சிறப்பு அழைப்பாளராக பட்டிமன்ற பேச்சாளர் கவிதா ஜவகர் அவர்கள் கலந்துகொண்டு சிறந்த கருத்துக்களை வழங்கி மாணவர்களையும், பெற்றோர்களையும் சிரிப்பலையில் அழ்த்தினார். பள்ளியின் முதல்வர் ராபியா மற்றும் மெட்ரிக் பள்ளி முதல்வர் தனலட்சுமி கலந்து கொண்டனர். யு.கே.ஜி மாணவர் ஷாவிக் மற்றும் பூவித்தா அனைவரையும் வரவேற்றார்கள். ஆசிரியை இந்திரா காந்தி விழாவை ஒருங்கிணைத்தார். கல்விக் குழுமத்தின் தாளாளர் வழக்கறிஞர் ஸ்ரீ ரங்க பூபதி மற்றும் கல்விக் குழுமத்தின் செயலாளர் வழக்கறிஞர் ஆர்பி ஸ்ரீபதி சிறப்புரையாற்றி மாணவர்களுக்கு பட்டங்களையும், பள்ளியில் நடைபெற்ற வண்ணம் தீட்டுதல், கதை சொல்லுதல், பாட்டு பாடுதல், திருக்குறள் ஒப்புவித்தல் போன்ற மாதாந்திரப் போட்டியில் வெற்றி பெற்ற குழந்தைகளுக்கு பாராட்டுச் சான்றிதழ் கோப்பைகள் வழங்கினர். ஆசிரியர்கள் அனிதா, சுமதி, பிரவீனா, சௌமியா ஆகியோர் விழாவை சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தனர். ஆசிரியை சௌமியா நன்றி கூறினார்.

# திருவெண்ணெய்நல்லூரில் மத்திய கல்வி அமைச்சர் உருவ பொம்மை எரிப்பு



**திருவெண்ணெய்நல்லூர், மார்ச் 12-**

திருவெண்ணெய்நல்லூரில் நகர திமுக சார்பில் மத்திய கல்வி அமைச்சர் தர்மேந்திர பிரதான் உருவ பொம்மை எரிக்கப்பட்டது. மும்மொழிக் கொள்கை விவகாரம் தொடர்பாக மத்திய கல்வி அமைச்சர் தர்மேந்திர பிரதான் நாடாளு மன்றத்தில் பேசும் போது திமுக நாடாளுமன்ற உறுப்பினர்கள் நாகரிகம் இல்லாதவர்கள் என கூறியிருந்தார். இதற்குக் கண்டனம் தெரிவித்து தமிழகம் முழுவதும் திமுகவினர் தர்மேந்திர பிரதான் உருவப் பொம்மையை எரித்து போராட்டத்தில் ஈடுபட்டனர். இதையொட்டி விழுப்புரம் மாவட்டம் திருவெண்ணெய்நல்லூர் கடைவீதியில் நகர திமுக சார்பில் நகர செயலாளர் பூக்கடை கணேசன் தலைமையில் தமிழர்களையும் தமிழ்நாட்டு மக்களையும் தொடர்ந்து இழிவுபடுத்தி பேசி வரும் மத்திய கல்வி அமைச்சர் தர்மேந்திர பிரதான் உருவ பொம்மை எரித்து கண்டன கோஷமிட்டனர். இதில் திமுக நிர்வாகிகள் பலர் உடன் இருந்தனர்.

# கர்லாகட்டை, புஸ் ஷாப் டெட் லிப்ட் போட்டி பரிசளிப்பு



**கோவை, மார்ச் 12-**

கோவையில் தென்னிந்திய அளவில் நடைபெற்ற நெரு டெக்னாலஜி கல்லூரில் பெஞ்ச் பிரஸ் மற்றும் கர்லகட்டை, புஸ் ஷாப் டெட் லிப்ட் போட்டி நடைபெற்றது. இதில் சாம்பியன் ஜிம் விளையாட்டு வீரர்கள் மற்றும் பெண்கள் ஜீன்யர், சீனியர் பல்வேறு எடை பிரிவில் கலந்துகொண்டு சிவகாசியை சேர்ந்த மாதவன் என்பவர் முதல் பரிசை வென்று சான்றிதழையும் பெற்றார்.

இவர் 6ஆம் பகுதி கழக செயலாளர் ஞானசேககரனிடம் வாழ்த்துகள் பெற்றார். அருகில் மண்ட லகுழு தலைவர் சேவகன், சிவகாசி மாநகர விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் மைக்கேல், வட்ட கழக செயலாளர்கள் விக்னேஷ் பிரபாகரன், கருப்பசாமி, முன்னாள் நகர்மன்ற உறுப்பினர் ஆறுமுகசாமி ஆகியோர் இருந்தார்கள்.

# மாணவிக்கு சான்றிதழ் வழங்கல்



**ஈரோடு, மார்ச் 12-**

ஈரோடு மாவட்ட ஆட்சியரக கூட்டரங்கில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சித்த லைவர் ராஜ கோபால் சுன்கரா தலைமையில் நடைபெற்றது.

இக்குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் இலவச வீட்டுமனை பட்டா, பட்டா மாறுதல், மேல்முறையீடு, ஆக்கிரமிப்புகள் அகற்றுதல், புதிய குடும்ப அட்டை, மாற்றுத்திறனாளிகள் உதவித்தொகை, அரசு வேலை வேண்டுதல், சாலை வசதி, பேருந்து வசதி மற்றும் காவல் துறை நடவடிக்கை உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகள் குறித்து மொத்தம் 220 மனுக்கள் வரப்பெற்றன. பொதுமக்கள் அளித்த பல்வேறு கோரிக்கை மனுக்களை மாவட்ட ஆட்சித்தலைவர் பெற்று உரிய துறை அலுவலர்களிடம் வழங்கி அவற்றின் மீது உடனடி நடவடிக்கை எடுத்திட உத்தரவிட்டார். மேலும், மாண்புமிகு முதலமைச்சர் தனிப்பிரிவு மனுக்கள், மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் பெறப்பட்ட மனுக்கள் மீது மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் குறித்து ஆய்வு மேற்கொண்டார்.

இக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் உலக சிக்கன தினவிழாவினை முன்னிட்டு, நடைபெற்ற பேச்சுப்போட்டி, கவிதைப் போட்டி, வினாடி வினா போட்டி மற்றும் சொற்றொடர் போட்டிகளில் முதல் 3 இடங்களை பெற்ற 15 மாணவ, மாணவியர்களுக்கு நற்சான்றிதழ் மற்றும் பள்ளிகளுக்கு கேடயங்களையும், மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் சார்பில் 2 மாற்றுத்திறனாளிகளுக்கு தலா ரூ.50,000 வீதம் ரூ.1.00 லட்சம் ஆவின் பாலகம் அமைத்திட ஊக்கத்தொகையினையும் வழங்கினார்.

இக்கூட்டத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் சாந்த குமார், உதவி ஆட்சியர் (பயிற்சி) ராமகிருஷ்ண சாமி, தனித்துணை ஆட்சியர் (ச.பா.தி) செல்வராஜ், மாவட்ட வழங்கல் அலுவலர் ராம்குமார், உதவி ஆணையர் (கலால்) தியாகராஜன், மண்டல உதவி இயக்குநர் (சிறுசேமிப்பு) விஜயராஜ்குமார், மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் ராஜ கோபால், மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர் சக்திவேல், மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் பூபதி, துணை ஆட்சியர் (பயிற்சி) கே.சிவபிரகாசம் உட்பட அனைத்துத்துறை அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

# மும்மொழிக் கொள்கையை ஆதரித்து கையெழுத்து இயக்கம்



**தூத்துக்குடி, மார்ச் 12-**

கயத்தாறில் பாரதிய ஜனதா கட்சியினர் மும்மொழிக் கொள்கையை ஆதரித்து கயத்தாறு கிழக்கு ஒன்றிய தலைவர் ராமர் பாண்டியன் தலைமையில் கட்சி நிர்வாகிகள் கயத்தாறில் முக்கிய ரதவீதிகளில் கடை, கடையாக, ஆட்டோ ஸ்டாண்ட், புதிய, பழைய பேருந்து நிலையங்களில் உள்ள பொது மக்களிடம் மும்மொழிக் கொள்கையை ஆதரித்து ஆயிரத்துக்கும் மேற்பட்டோரிடம் இராஜாபுதுக்குடி, கிராமங்களுக்கு சென்று கையெழுத்து இயக்கத்தை தொடங்கி கையெழுத்து வாங்கினர். இந்த நிகழ்ச்சியில் கயத்தாறு பாரதிய ஜனதா கட்சியின் முன்னாள் ஒன்றிய தலைவர் முருகன், தூத்துக்குடி வடக்கு மாவட்ட விவசாய அனி தலைவர் மருதையா, முன்னாள் மாவட்ட செயலாளர் முத்துப்பாண்டியன், ஒன்றிய பொதுச் செயலாளர் ஆதி நாராயணன், மாவட்ட நிர்வாகி இராமகிருஷ்ணன், மற்றும் மாவட்ட, ஒன்றிய, நகர, கிளைக் கழக நிர்வாகிகள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

# வளர்ச்சி திட்டப்பணிகள் தொடர்பாக உயர்மட்ட குழு கூட்டம்

**ஈரோடு, மார்ச் 12-**



ஈரோடு மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் ஈரோடு மாவட்ட வளர்ச்சி திட்டப்பணிகள் தொடர்பாக அனைத்துத்துறை அலுவலர்களுடனான மாவட்ட உயர்மட்ட குழுக் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் ராஜ கோபால் சுன்கரா தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள், ஊரக வளர்ச்சி (ம) ஊராட்சித்துறையின் சார்பில் சத்தியமங்கலம் மற்றும் அந்தியூர் வருவாய் வட்டத்தில் சாலைவசதி இல்லாத குக்கிராமங்களுக்கு சாலைவசதி ஏற்படுத்துதல், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறையின் சார்பில் வனச்சாலைக்கு பதிலாக வனத்துறைக்கு வழங்கப்படவுள்ள மாற்றுநிலம் ஆகிய பணிகளின் முன்னேற்றம் குறித்து தொடர்புடைய அலுவலர்களிடம் கேட்டறிந்தார்.

தொடர்ந்து, தொழிலாளர் துறையின் சார்பில் பதிவு பெற்ற கட்டுமானத் தொழிலாளர்களுக்கான வீட்டு வசதித் திட்டத்தில் நிலுவையில் உள்ள தடையின்மைச் சான்றியினை சம்பந்தப்பட்ட வட்டாட்சியர்கள், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் உடனடியாக அனுப்பிட அறிவுறுத்தினார். மேலும், அனைத்து கிராம ஊராட்சிகளில் புதிதாக கட்டி முடிக்கப்பட்ட வீடுகள் அனைத்தையும் வரி கேட்பு பட்டியலில் முன்னேற்றம் ஆய்வு குறித்தும் ஆய்வு மேற்கொண்டார்.

தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் சார்பில் புதிதாக கட்டப்பட்ட அடுக்குமாடி குடியிருப்புகளில் குடிநீர் இணைப்பு, மின் விளக்குகள் அமைத்தல் மற்றும் புதிய ஆழ்குழாய் கிணறு அமைத்து மின்மோட்டார் பொருத்தும் பணியினை துரிதப்படுத்தி விரைந்து முடித்திட துறை அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

பள்ளிகல்வித்துறையின் சார்பில் புதிய பள்ளி கட்டிடங்கள் கட்டுதல், ஒருங்கிணைந்த சாலை மேம்பாடு செய்தல், உறுதிபடுத்துதல் தொடர்பாக துறை அலுவலருடன் விரிவாக ஆய்வு மேற்கொண்டார். தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் மேற்கொள்ளப்பட வேண்டிய குடிநீர் திட்டப்பணிகள் விரைந்து முடித்து பயன்பாட்டிற்கு வழங்கிட அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார். மேலும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவித்த திட்டங்கள் மற்றும் தமிழ்நாடு சட்டமன்ற பேரவை மானிய கோரிக்கை அறிவிப்புகளின் முன்னேற்றம் குறித்தும் துறை வாரியாக விரிவாக ஆய்வு மேற்கொண்டு, பணிகளை விரைந்து முடித்திட அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

இக்கூட்டத்தில், கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) திட்ட அலுவலர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை அர்பித் ஜெயின், மாவட்ட வருவாய் அலுவலர் சாந்த குமார், கோபிசெட்டிபாளையம் சார் ஆட்சியர் சிவானந்தம், மாவட்ட வன அலுவலர் குமிலி வெங்கட அப்பால நாயுடு, (ஈரோடு), துணை இயக்குநர் (சத்தியமங்கலம் புலிகள் காப்பகம், ஆசனூர் பிரிவு) சுதாகர், கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர் கந்தராஜா, ஈரோடு மாநகராட்சி துணை ஆணையாளர் தனலட்சுமி, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்கள் முஹம்மது குதுரத்துல்லா (பொது), செல்வராஜ் (வளர்ச்சி), உட்பட அனைத்துத்துறை உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# அலைடு ஹெல்த் சயின்ஸ் துறையின் சார்பில் சர்வதேச மகளிர் தின விழா



**சேலம், மார்ச் 12-**

விநாயகா மிஷினின் விம்ஸ் வளாக அலைடு ஹெல்த் சயின்ஸ் துறையின் சார்பில் சர்வதேச மகளிர் தின கொண்டாட்டம் நடந்தது.

விநாயகா மிஷன் பல்கலைக் கழகத்தின் விம்ஸ் வளாக அலைடு ஹெல்த் சயின்ஸ் கல்லூரியின் சார்பில் சர்வதேச பெண் மகளிர் தினம் கல்லூரி வளாகத்தில் சிறப்பாக கொண்டாடப்பட்டது. முன்னதாக கல்லூரிக்கு வருகை புரிந்திருந்த அனைத்து பேராசிரியைகளையும், அலுவலகப்பெண் ஊழியர்களையும் கல்லூரியின் பேராசிரியர்கள் பூங்கொத்து கொடுத்து வரவேற்றனர்.

தொடர்ந்து நிகழ்விற்கு துறையின்டீன் பேராசிரியர் டாக்டர் செந்தில்குமார் முன்னிலை வகித்து வரவேற்புரை வழங்கி மகளிர் தின வாழ்த்துக்களை தெரிவித்தார். இத்தினகொண்டாட்டத்தை முன்னிட்டு பல்வேறு கலைநிகழ்ச்சிகளும் நடத்தப்பட்டன. மேலும் கல்லூரியில் பணிபுரியும் அனைத்து பேராசிரியைகளையும் அலுவலகப்பெண் ஊழியர்களையும் கௌரவிக்கும் விதமாக பேராசிரியர்கள் மற்றும் அலுவலக ஆண் ஊழியர்கள் மூலம் நினைவுபரிசும்வழங்கப்பட்டது.

இதற்கான அனைத்து ஏற்பாட்டினையும் துறையின் பேராசிரியர்கள் மற்றும் அலுவலக ஆண் ஊழியர்கள் சிறப்பாக செய்திருந்தனர்.

E-mail:maalaiexpresspdy@gmail.com
• புதன் • மார்ச் 12, 2025
மாலை எக்ஸ்பிரஸ்

# பெண் நீதிபதிகள் தின விழா





**சேலம், மார்ச் 12–**

சேலம் மாவட்ட குற்றவியல் வழக்கறிஞர்கள் சங்கம் நடத்திய அகில இந்திய மகளிர் தின விழா, மற்றும் பெண் நீதிபதிகள் தின விழா சேலம் மாவட்ட குற்றவியல் வழக்கறிஞர்கள் சங்க கட்டிடத்தில் சிறப்பாக நடைபெற்றது. இதில் போஸ்கோ ஆக்ட் புத்தகத்தை சேலம் மாவட்ட முதன்மை நீதிபதி சுமதி அனைவருக்கும் வழங்கி நிகழ்ச்சியை துவக்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில் சேலம் மாவட்ட ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகத்தில் பணிபுரியும் நீதிபதிகள் மற்றும் சேலம் மாவட்ட குற்றவியல் வழக்கறிஞர்கள் சங்க பொறுப்பாளர்கள், உறுப்பினர்கள் மற்றும் அரசு வழக்கறிஞர்கள் மற்றும் சேலம் மாவட்ட வழக்கறிஞர்கள் சங்கங்களின் வழக்கறிஞர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். மேலும் சேலம் மாவட்ட குற்றவியல் வழக்கறிஞர்கள் சங்கத் தலைவர் ஜெ.மு. இமயவர்மன் மற்றும் செயலாளர், பொருளாளர் ஆகியோர் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

# விக்கிரவாண்டியில் தீ தடுப்பு பயிற்சி

**விக்கிரவாண்டி, மார்ச் 12–**

விக்கிரவாண்டி சுங்கச் சாவடியில் தேசிய பாது காப்பு வாரம் தொடர்ந்து கடைபிடிக்கப்படுவதை முன்னிட்டு, அனைத்து ஊழியர்களின் பணியிட பாதுகாப்பை உறுதி செய் வதற்காக உளுந்தூர் பேட்டை எக்ஸ் பிரஸ்வேஸ் பிரைவேட் லிமிடெட்ன் திட்ட மேலாளர் சதீஷ் குமாரின் தொடர்ச்சியான வழிகாட்டுதல் மற்றும் ஆதரவின் கீழ், விக்கிர வாண்டி சுங்கச்சாவடியில் தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்பு நிலையம், விக்கிரவாண்டியின் ஆதரவுடன் ஒரு தீ தடுப்பு பயிற்சியை ஏற்பாடு செய்தது. நிலைய தீயணைப்பு அதிகாரி சுந்தரேசன் தனது குழுவினருடன் வந்து தீ மற்றும் தீ வகைகள் குறித்து கோட் பாட்டளவில் விளக்கினார். அதன் பிறகு, கூடியிருந்த ஊழியர்களுக்கு தீயை



அணைக்கும் கருவிகள் பற்றி விளக்கினார். அதோடு, மணல், தண்ணீர், ஈரமான சணல் பைகள், போர்வைகள் மற்றும் தீயை அணைக்கும் கருவிகள் போன்ற அருகில் எளிதில் கிடைக்கக்கூடிய பொருட் களைப் பயன்படுத்தி தீயை எவ்வாறு அணைக்க முடியும் என்றும் விளக்கினார். இறுதியாக, தீ பரவுவதை மேலும் கட்டுப்படுத்த, உடனடியாக அருகிலுள்ள தீயணைப்பு நிலையங்களுக்கு 100 என்ற கட்டணமில்லா எண்களைப் பயன்படுத்தி தீ தகவல்களைத் தெரிவிக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. துணை பொது மேலாளர் அமுர்தலிங்கம் உட் பட சுங்கச்சாவடியின் அனைத்து உறுப் பினர்களும் கலந்து கொண்டனர். விக்கிர வாண்டி சுங்கச்சாவடி மக்கள் தொடர்பு அதிகாரி தண்டபாணி முன்னிலை வகித்தார். பாதுகாப்பு அதிகாரி மனோஜ்குமார் பயிற்சியினை ஒருங்கிணைப்பு செய்தார். துணை மேலாளர் சொர்ணமணி நன்றியுரை வழங்கினார்.

# அரசு மருத்துவமனைகளில் கர்ப்பிணித் தாய்மார்களுக்கான சேவைகள் குறித்த விழிப்புணர்வு



**கன்னியாகுமரி, மார்ச் 12–**

கன்னியாகுமரி மாவட்டத்தில் அனைத்து கர்ப்பிணித் தாய்மார் களுக்கான பேறுகாலத்தில் தேவைப்படும் முன்கவனிப்பு, பிரசவம், பிரசவகால பின்கவனிப்பு உட்பட அனைத்து மருத்துவ வசதிகளும் மற்றும் பச்சிளம் குழந்தைகளுக்கான சேவைகள் உட்பட அனைத்து வசதிகளும் பெற்று 24 ஜ் 7 மணிநேரமும் செயல்படும் அரசு மருத்துவக் கல்லூரி, அரசு மருத்துவமனைகள், அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள் நிபுணத்துவம் பெற்ற மருத்துவர்களை கொண்டு செயல்பட்டு வருகின்றன.

கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவரின் அறிவுறுத்தலின்படி அகஸ்தீஸ்வரம், குருந்தன் கோடு மற்றும் ராஜாக்கமங்கலம் வட்டாரத்தை சேர்ந்த 24 கர்ப்பிணித் தாய்மார்கள் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை ஆசாரிப்பள்ளத்தி ற்கும், தக்கலை வட்டாரத்தை சேர்ந்த 17 கர்ப்பிணித் தாய்மார்கள் தக்கலை அரசு மருத்துவமனைக்கும், மேல்புறம் வட்டாரத்தை சார்ந்த 15 கர்ப்பிணித் தாய்மார்கள் குழித்துறை அரசு மருத்துவ மனைக்கும், தோவாளை வட்டாரத்தை சார்ந்த 5 கர்ப்பிணித் தாய்மார்கள் பூதப்பாண்டி அரசு மருத்துவமனைக்கும், திருவட்டார் வட்டாரத்தை சார்ந்த 3 கர்ப்பிணித் தாய்மார்கள் குலசேகரம் அரசு மருத்துவமனைக்கும் அரசு ஆரம்ப சுகாதார நிலைய சமுதாய சுகாதார செவிலியர்கள், பகுதி சுகாதார செவிலியர்கள், கிராம சுகாதார செவிலியர்களால் அழைத்துச் செல்லப்பட்டு கர்ப்பிணித் தாய்மார்களுக்கு அரசு மருத்துவமனைகளில் உள்ள மகப்பேறு மருத்துவர்களுடன் கலந்துரையாடல் செய்து அவர்கள் சந்தேகங்களை நிவிர்த்தி செய்யவும், அரசு மருத்துவ மனைகளில் வழங்கப்படும் சேவைகளை குறித்து அறிந்துகொள்ளவும் வழிவகை செய்யப்பட்டு மகப்பேறு மருத்துவர்களால் எடுத்துரைக்கப்பட்டது.

மேலும் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை ஆசாரிப்பள்ளத்தில் மாவட்ட சுகாதார அலுவலர், மருத்துவக் கல்லூரி முதல்வர், மகப்பேறு துறைத்தலைவர் மற்றும் உறைவிட மருத்துவ அலுவலர் முதலானோர் அடங்கிய குழுவினர் மருத்துவக்கல்லூரிக்கு வந்த கர்ப்பிணித் தாய்மார் களுடன் உரையாடினர். மேலும் அங்கு வழங்கப்படும் அனைத்து சேவைகளும் (24 ஜ் 7 மகப்பேறு மற்றும் குழந்தைகள் மருத்துவம், ஸ்கேன் வசதி, பிரசவ அறை, பிரசவ வார்டுகள், தீவிர சிகிச்சை பிரிவு, பச்சிளங் ழூந்தைகளுக்கான சிகிச்சை பிரிவு, 24 மணிநேர வெந்நீர் வசதி, போன்றவை) நேரடியாக காண்பிக்கப்பட்டது. மேலும் இலவசமாக கர்ப்பிணிகளுக்கு வழங்கப்படும் அனைத்து சேவைகள் குறித்தும் மாவட்ட சுகாதார அலுவலரால் விளக்கிக் கூறப்பட்டு விழிப்புணர்வு வழங்கப்பட்டது. மேலும் அன்றாட கர்ப்பக்கால சிகிச்சைகளுக்காக ஏற்படும் கூடுதல் செலவுகளைத் தவிர்த்து, அரசு மருத்துவமனைகளில் வழங்கப்படும் தரமான சேவைகளை கர்ப்பிணித் தாய்மார்கள் பயன்படுத்தி, அவர்கள் பிரசவத்தை அரசு மருத்துவமனைகளிலே திட்டமிட வேண்டும் என்றும் அறிவுறுத்தப் பட்டது.

# "திராவிட மாடலே வெல்லும்" நூல் விரைவில் வெளியீடு




**திருச்சி, மார்ச் 12–**

தமிழக முதல்வர் பிறந்த நாளை முன்னிட்டு "திராவிட மாடலே வெல்லும்" என்ற பெயரில் முனைவர் தமீமுல் அன்சாரி நிஜாமி எழுதிய நூல் விரைவில் வெளியீடு செய்யப்பட உள்ளது.

இதுகுறித்து இந்திய சோஷலிஸ்ட் கட்சி தேசிய செயலாளர் முனைவர் தமீமுல் அன்சாரி நிஜாமி வெளியிட்ட அறிக்கையில், சமாஜ்வாதி கட்சியின் தலைவர் மரியாதைக் குரிய அகிலேஷ் யாதவ் வெளியிட அவரது நண்பர் காமராஜ் ஜெயின் பெற்றுக் கொள்கிறார்.

மூத்த திமுக ஆளுமை மரியாதைக்குரிய திருச்சி செல்வேந்திரன், நாகூர் தர்ஹா பிரசிடெண்ட் கண்ணியமிகு கலீஃபா சாஹிப், கர்நாடக முன்னாள் அமைச்சர் கவிஞர் லலிதா நாயக் ஆகியோர் சிறப்பு விருந்தினராக பங்கேற்க உள்ளனர். இந்திய சோஷலிஸ்ட் கட்சி மாநில துணை தலைவர் சி.என் குமார் தலைமை தாங்குகிறார். என தெரிவிக்கப் பட்டுள்ளது.

**தினமும் மாலையில் மாலை எக்ஸ்பிரஸ் படியுங்கள்**

# ஈரோடு மாநகராட்சியில் சிறப்பு தூய்மை பணி



**ஈரோடு, மார்ச் 12–**

ஈரோடு மாநகராட்சி மேயர் அறிவுறுத் தலின்பேரில் ஈரோடு மாநகராட்சியில் வாரம் இரண்டு முறை சிறப்பு தூய்மைப் பணிகள் நடைபெற்ற வருகின்றன. அந்த வகையில் ஈரோடு மாநகராட்சிக்கு உட்பட்ட மண்டலம் 1ல் உள்ள 4வது வார்டிலும், மண்டலம் 2 க்குட்பட்ட 21 வது வார்டிலும், மண்டலம் 3 க்குட்பட்ட 33 வது வார்டிலும், மண்டலம் 4க்குட்பட்ட 57 வது வார்டிலும் சிறப்பு தூய்மைப் பணிகள் நடைபெற்றது.

இப்பணிகளின்போது மேயர் நாகரத்தினம் சுப்பிரமணியன், துணை மேயர் செல்வராஜ், மாநகராட்சி துணை ஆணையாளர் மற்றும் ஆணையாளர் (பொ) தனலட்சுமி மற்றும் அனைத்து மண்டலங்களின் உதவி ஆணையாளர்களும், உதவி செயற்பொறியர்களும், இளநிலை பொறியாளர்களும், துப்புரவு அலுவலர்களும் மற்றும் துப்புரவு ஆய்வாளர்களும் பங்கேற்று பணிகளை மேற்கொண்டனர்.

மேலும், இப்பணிகளின்போது வார்டுகளில் குடிநீர் விநியோகத்தின்போது ஏற்படும் நீர்கசிவு மற்றும் பாதாள சாக்கடையில் ஏற்படும் நீர்கசிவு போன்ற பணிகளும் பார்க்கப்பட்டு, உடனுக்குடன் சரி செய்யப்பட்டது. பொதுமக்களின் கோரிக்கைகள் உடனுக்குடன் நிறைவேற்றப் பட்டதால் மாநகராட்சி நிர்வாகத்தை பொதுமக்கள் வெகுவாக பாராட்டினர்.

# கோவை மலுமிச்சம்பட்டி நாகசக்தி அம்மன் தியான பீடத்தில் முன்னாள் அமைச்சர் தரிசனம்

**கோவை, மார்ச் 12–**

கோவை மலுமிச்சம் பட்டி நாகசக்தி அம்மன் தியான பீடம் விஸ்வகர்ம ஜகத்குரு நிலவேம்பு சித்தர் ஸ்ரீலஸ்ரீ சிவசண்முகசுந்தர பாபுஜி சுவாமிகளின் அழைப்பை ஏற்று வருகை புரிந்த முன்னாள் அமைச்சர் கே.டி.ராஜேந்திர பாலாஜிக்கு நாக சக்தி அம்மன் தியான பீடத்தின் சார்பில் விஸ்வகர்ம ஜகத்குரு நிலவேம்பு சித்தர் ஸ்ரீலஸ்ரீ சிவ சண்முகசுந்தர பாபுஜி சுவாமிகளின் தலைமையில் பரிவட்டம் கட்டி சால்வை அணிவித்து உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது.

நிகழ்ச்சியை தொடர்ந்து அதிமுக முன்னாள் அமைச்சர் கே.டி.ராஜேந்திர பாலாஜி கருவறைக்குள் சென்று தீபாராதனை காட்டி சிறப்பு வழிபாடு செய்தார். அதனைத்



தொடர்ந்து அதிமுக முன்னாள் பால் வளத்துறை அமைச்சர் கே.டி.ராஜேந்திர பாலாஜி கூறுகையில், ஸ்ரீல ஸ்ரீ பாபு ஜி சுவாமிகள் எனது நீண்ட கால நண்பர். அவரது அழைப்பை ஏற்று வருகை புரிந்ததாக தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் தமிழ்நாடு பாண்டிச்சேரி விஸ்வகர்மா சமூக மக்கள் கூட்டமைப்பு மாநில துணைத் தலைவரும் மலுமிச்சம்பட்டி தலைவருமான எஸ்.எம் கமலஹாசன், செயலாளர் செல்வராஜ் ஆச்சாரி, மாவட்ட பொறுப்பாளர் தாண்டவாச்சாரியர், கெம்பட்டி காலனி நடராஜ் மற்றும் பல்வேறு மாவட்ட நிர்வாகிகள், ஸ்ரீ நாக சக்தி அம்மன் அறக்கட்டளை நிர்வாகிகள், பக்தர்கள், பொதுமக்கள் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

# மக்களுக்கு உதவாத காகிதப்பூ பட்ஜெட் எதிர்க்கட்சித் தலைவர் சிவா கருத்து



புதுச்சேரி, மார்ச் 12-

2025-26ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கை குறித்து சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் சிவா செய்தியாளர்களிடம் கூறியதாவது: முதல்வர் தாக்கல் செய்துள்ள பட்ஜெட்டில் புதிய வருமானம் ஏதும் இல்லாமல், ஒன்றிய அரசின் சிறப்பு நிதி ஏதும் இல்லாமல் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எதிர்வரும் தேர்தலை முன்வைத்து அறிவிப்புகள் செய்திருக்கிறார்கள். கடந்த பட்ஜெட்டில் அறிவித்த திட்டங்கள் எல்லாம் கிடப்பில் உள்ள நிலையில் மணக்க மணக்க பட்ஜெட் உரை நிகழ்த்தி இருக்கிறார் முதல்வர். ஆனால் வெறும் காகித பூவாக இருக்கிறது. புதுச்சேரியின் வருவாய், செலவினங்கள், கடன் வாங்க முடியாத நிலை ஆகியவற்றை கணக்கில் கொள்ளாமல் பல்வேறு திட்டங்களை அறிவித்துள்ளார்கள். அதில் மக்கள் எதிர்பார்த்த திட்டங்கள் ஏதும் பட்ஜெட்டில் இடம்பெறவில்லை. புதிய தொழில் கொள்கை, வணிகர்களுக்கு சலுகைகள், ஐடி பார்க், புதிய சுற்றுலாத் திட்டங்கள் ஏதும் இல்லை. இலவசங்களை அறிவித்து மக்களை ஏமாற்றி இருக்கிறார்.

புதுச்சேரி மக்கள் எதிர்பார்க்கும் வேலைவாய்ப்பு, புதிய தொழிற்சாலைகள், துறைமுகம் மூலம் அரசுக்கு நேரடி வருமானம், மின்துறை தனியாருக்கு மாற்றும் முடிவை கைவிடுதல், வேலையிழந்து உள்ளவர்களுக்கு வேலை, மாநில அந்தஸ்து போன்ற எந்த உறுதியையும் பட்ஜெட்டில் தெரிவிக்கவில்லை. சிக்காகி உள்ள பாசிக், பாப்ஸ்கோ போன்ற நிறுவனங்களுக்கான நிலுவை தொகையை தருவதாக சொல்கிறார்களே தவிர அங்கு பணியாற்றிய தொழிலாளர்கள் தற்கொலை செய்து கொண்டுள்ள நிலையில் கூட அவர்களின் வாழ்வாதாரத்திற்கு எந்த உத்திரவாதமும் இந்த அரசு அளிக்கவில்லை. புதுச்சேரி மாநில வளர்ச்சிக்கு உதவாத காகிதப்பூ பட்ஜெட்டை முதல்வர் ரங்கசாமி தாக்கல் செய்துள்ளார்.

மகளிர் உரிமைத்தொகை ரூ. ஆயிரம் ஏற்கனவே தேர்ந்தெடுக்கப் பட்டவர்களுக்கு மாதம் மாதம் கொடுக்க தவறிய இந்த அரசு தற்பொழுது ரூ.2.500 தரப்போவதாக அறிவித்துள்ளது. மக்களுக்கு அது முழுமையாக கிடைத்தால் மகிழ்ச்சி. டெல்லியை பின்பற்றி புதுச்சேரியில் கொடுக்க திட்டமிட்டுள்ளதாக சொல்லப்படுகிறது. டெல்லியில் மாநில வருவாயை பெருக்க பல வழிகள் உள்ளன. ஒரு சில திட்டங்களுக்கு ஒன்றிய அரசு நேரடி உதவி புரிகிறது. ஆனால் புதுச்சேரிக்கு அப்படி ஏதும் ஒன்றிய அரசு செய்யவில்லை. நம் மாநிலத்தில் நிதிநிலை எப்படி இருக்கிறது என்று நன்கு தெரிந்தும் முதல்வர் அறிவிப்பு செய்திருக்கிறார். அதில் அவர் சொல்லிய திட்டங்கள் அனைத்தும் உத்தேசிக்கப்பட்டுள்ளதாக குறிப்பிட்டுள்ளார். எந்த திட்டத்திற்கு எவ்வளவு நிதி ஒதுக்கப்பட்டுள்ளது என்ற புள்ளி விவரம் கொடுக்கப்படவில்லை.

2022ஆம் ஆண்டு கிழக்கு கடற்கரை சாலையில் புதிய பேருந்து நிலையம் கட்டுவதற்கு ஒன்றிய உள்துறை அமைச்சர் அமித்ஷா ரூ.34 கோடிக்கு அடிக்கல் நாட்டினார். அத்திட்டத்திற்கு தற்போது வெறும் ரூ.10 கோடி என்று அறிவிக்கப்பட்டிருக்கிறதே ஏன் என்ற கேள்விக்கு, ஈசிஆரில் லதா ஸ்டீல் நிறுவனத்திற்கு அருகில் 16 ஏக்கர் பரப்பளவில் பேருந்து நிலையம், நவீன மீன் அங்காடி உள்ளிட்ட திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டப்பட்டது. ஆனால் ஒரு பகுதியில் மட்டும் மீன் அங்காடி திறக்கப்பட்டுள்ளது. மீதி திட்டம் என்னவானது என்று தெரியவில்லை. தற்போது பேருந்து நிலையம் கட்டுவதாக சொல்லி இருக்கிறார்கள். எல்லாம் அறிவிப்பாக மட்டும் இருக்கக் கூடாது என்பது தான் எங்கள் எண்ணம் என்றார்.

கடந்த ஆண்டு பட்ஜெட் கூட்டத்தொடரில் ஆயுஷ்மான் இன்சூரன்ஸ் திட்டம் தோல்வி அடைந்ததாக முதல்வரே தெரிவித்தார். அதற்கு மாற்றாக புதுச்சேரி அரசு அனைவருக்கும் காப்பீடு திட்டத்தை செயல்படுத்தும் என்றார். ஆனால் இதுவரை அத்திட்டம் செயல்படுத்தப்படவில்லை. ஆயுஷ்மான் திட்டத்தில் வறுமைக்கோட்டிற்கு கீழ் உள்ளவர்களுக்கு ரூ.5 லட்சம் கொடுத்தே எந்த பயனும் இல்லாதபோது தற்போது ஆளுநர் உரையில் மேலும் ரூ.2 லட்சம் உயர்த்தி வழங்குவதாக அறிவிக்கப்பட்டு உள்ளது வேடிக்கையாக உள்ளது.

மாநில அந்தஸ்து கேட்டு 15 முறை சட்டமன்றத்தில் தீர்மானம் இயற்றி ஒன்றிய அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. ஆனால் ஒன்றியத்தில் ஆளுகின்றவர்கள் புதுச்சேரி மக்களின் கருத்தை, ஜனநாயக உரிமையை, சட்டமன்ற பிரதிநிதிகளின் உரிமையை உதாசீனப்படுத்தி வருகின்றனர். இது ஜனநாயகத்தை குழிதோண்டி புதைக்கும் செயல். தொடர்ந்து புதுச்சேரியின் உரிமைக்காக திமுக போராடும். எங்களுக்கான காலம் வரும் அப்போது கண்டிப்பாக மாநில அந்தஸ்து பெறுவோம். சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதி 1996ஆம் ஆண்டு தமிழகத்தில் தலைவர் கலைஞர் அவர்கள் கொண்டு வந்ததை அடிப்படையாக கொண்டு, அப்போதைய முதல்வர் ஆர்.வீ. ஜானகிராமன் அத்திட்டத்தை இங்கு கொண்டு வந்தார். அப்போது ரூ.10 லட்சம் ஆண்டுக்கு வழங்கப்பட்டது. அப்போது அது பெரிய பணமாக இருந்தது. இன்று ரூ.2 கோடி அளிக்கப்படுகிறது. அந்த பணத்தில் எந்த திட்டத்தை முழுமையாக செயல்படுத்த முடியும் என்று எண்ணிப் பாருங்கள். ஆண்டுதோறும் கொடுக்க வேண்டிய தொகுதி மேம்பாட்டு நிதியை பாக்கி இல்லாமல் கொடுத்தாலே போதும். இதில் தற்போது ரூ.3 கோடி தருவதாக சொல்லப்பட்டு இருக்கிறது. அது முழுமையாக ஆண்டு தொடக்கத்தில் கொடுத்தால் வரவேற்போம். இவ்வாறு அவர் தெரிவித்தார்.

பேட்டியின்போது, திமுக சட்டமன்ற உறுப்பினர்கள் ஏ.எம்.எச். நாஜிம், வி.அனிபால் கென்னடி, இரா. செந்தில்குமார், எல்.சம்பத், நாக. தியாகராஜன் ஆகியோர் உடனிருந்தனர்.

# ஆரி - டெய்லரிங் முடித்த மகளிருக்கு சான்றிதழ் வழங்கும் நிகழ்ச்சி



பூரணாங்குப்பம் அம்மா ஆரி எம்ராய்டரி ட்ரைனிங் சென்டரில் பயிற்சி பெற்ற மகளிர்களுக்கு சான்றிதழ் மற்றும் கேடயம் வழங்கு நிகழ்ச்சி பூரணாங்குப்பம் பெரியமந்தை திடல் அருகில் நடைபெற்றது. நிகழ்ச்சியில் சபாநாயகர் ஏம்பலம் செல்வம் கலந்துகொண்டு பயிற்சி முடித்த மகளிர்களுக்கு சான்றிதழ் வழங்கி சிறப்பு செய்தார்கள். நிகழ்ச்சியை ஆரி டெய்லரிங் தலைமை பயிற்சியாளர் பவானி சதீஷ் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் சிறப்பு அழைப்பாளராக உள்ளாட்சித் துறை மேலாண் இயக்குனர் சௌந்தரராஜன், தவளகுப்பம் காவல் நிலைய துணை ஆய்வாளர் சண்முக சத்யா, பூரணாங்குப்பம் பனை ஆனந்தன், மற்றும் சிங்கப்பூர், கி.முருகேசன் ஆகியோர் கலந்துகொண்டு பயிற்சி முடித்த மகளிர்களுக்கு சான்றிதழ், கேடயம் வழங்கினார்கள். நன்றியுரையை சதீஷ் கூறினார்.

# திறன் மேம்பாட்டு பயிற்சி



புதுக்கோட்டை, மார்ச் 12-

புதுக்கோட்டையில் திறன் மேம்பாட்டு நிகழ்சியின் ஒரு பகுதியாக உடல் ஆரோக்கியமும்; மன அழுத்தமும் அதை போக்கும் வழிமுறைகளும் பற்றி புதுக்கோட்டை அரசு மருத்துவக் கல்லூரி சமூக மருத்துவம் மற்றும் நோய் தடுப்பு துறை மருத்துவர் கே. சரவணன் உரையாற்றினார். ஆரோக்கியமாக வாழ உணவில் மாவுச்சத்து; புரதம்; கொழுப்பு மற்றும் நுண்ணூட்ட சத்துக்களான மினரல்கள், விட்டமின்கள் இருக்கவேண்டும்.

பசி எடுத்த பின் சாப்பிடுவது. பற்களால் உணவை மென்று சாப்பிடுவது, தினமும் அரைமணி நேரம் உடற்பயிற்சி, மனம் வலிமையாக நல்ல சிந்தனை, நல்ல சொல், நல்ல செயல் வேண்டும்.

மனதை வலிமை படுத்த தியான பயிற்சி வேண்டும். குடும்ப அமைதியும் வேண்டும் என்று கூறினார்.

இதை வலியுறுத்த திருக்குறள், சிறு பஞ் சமூலம், குறுந்தொகை, கவிமணியின் பாடல்கள் மூலம் மேற்கோள் காட்டினார். இந்த நிகழ்ச்சிக்கு கூட்டுறவு சங்கங்களின் முதல்வர் இளங்கோ, முன்னாள் கூட்டுறவு துறை உயர்அலுவலர் ராமையா, ஆத்ம நாதன் மற்றும் பணியாளர்கள் பங்கு பெற்றனர்.

# அண்ணாமலைப் பல்கலையில் இசை விழா




சிதம்பரம், மார்ச் 12-

சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக்கழகம் இசைத்துறையில் 5 நாட்கள் நடைபெறும் இசைவிழாவானது மார்ச் 10 அன்று கோலாகலமாக துவங்கியது. முதல் நாள் தொடக்க விழாவில் துணைவேந்தர் ஒருங்கிணைப்புக்குழு உறுப்பினர், ஆட்சி மன்றக்குழு உறுப்பினர் மற்றும் நுண்கலைப்புல முதன்மையர் பேராசிரியர் முனைவர். ஜி. அருட்செல்வி குத்துவிளக்கேற்றி ஆசியுரை வழங்கினார். பதிவாளர் முனைவர். M. பிரகாஷ் வாழ்த்துரை வழங்கினார் இசைத்துறைத்தலைவர் முனைவர் குமார் வரவேற்புரை ஆற்றி விருந்தினர்களை கௌரவித்தார். வயலின்துறைப் பேராசிரியர் முனைவர் சுதர்சன் நன்றியுரை நல்கினார். அறிவியல் புலமுதன்மையர் முனைவர் ஸ்ரீராம் கல்விசார் இயக்குனர் முனைவர். லி. முல்லைநாதன், விலங்கியல் துறைத்தலைவர் பேராசிரியர் முனைவர் கி.சுப்ரமணியன் ஆகியோர் கலந்கொண்டனர். முதல் நாள் நிகழ்ச்சியில் பரதநாட்டிய கலைஞர் ஸ்ரீரங்கம் முனைவர். துஷாரா ஸ்ரீநிவாசன் குழுவினரின் நாட்டிய நிகழ்ச்சி நடைப்பெற்றது. இரண்டாம் நாள் நிகழ்ச்சியில் வீணை வித்வான் நாதகலா விபஞ்சி ஜெயராஜ் கிருஷ்ணன் மற்றும் ஜெயஸ்ரீ, ஜெயராஜ் கிருஷ்ணன், மிருதங்கம் அர்ஜுன் கணேஷ் ஆகியோரின் வீணை இசை நிகழ்ச்சி நடைப்பெற்றது.

# தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில் மகளிர் தின விழா



தெய்வானை அம்மாள் மகளிர் கல்லூரியில் நடைபெற்ற மகளிர் தின விழாவில் “கல்வி சார் பன்நோக்கு” விருதினை கல்லூரி முதல்வர் முனைவர் சி.அகிலாவுக்கு புதுவைத் தமிழ்ச் சங்கத் தலைவர் கலைமாமணி முனைவர் வி.முத்து வழங்கினார். உடன் சார்ஜண்ட் ந.மோகன், கலாம் சமூக இயக்கம் ராஜா, அறம் அறக்கட்டளை ஜெய.மனோகரன், பேராசிரியை இரா.ராஜேஸ்வரி, அ.ஹேமலதா, ம.சவுந்தரி, முனைவர் ரேகா, ந.விஜயா, சு.மலர்வாணி, எஸ்.வாசுகி ராமமூர்த்தி மற்றும் பலர் உள்ளனர்.

# திருமண நிதியுதவி வழங்கல்



புதுக்கோட்டை மாவட்டம், கீரமங்கலம் பேரூராட்சி, வி.எஸ்.ஆர். திருமண மஹாலில், சமூக நலன் (ம) மகளிர் உரிமைத்துறை மற்றும் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டம் சார்பில், சமூக நலத்துறையின்கீழ், ஏழைப் பெண்களுக்கு திருமண நிதியுதவி மற்றும் 8 கிராம் தங்கத்தினை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் வழங்கினார்.

# மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம்



**கன்னியாகுமரி, மார்ச் 12-**

கன்னியாகுமரி மாவட்ட ஆட்சியர் அலுவலக நாஞ்சில் கூட்டரங்கில், மாவட்ட ஆட்சித்தலைவர் அழகுமீனா தலைமையில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நடைபெற்றது.

நடைபெற்ற மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டத்தில், பொது மக்களிடமிருந்து கல்வி உதவித்தொகை, பட்டா பெயர் மாற்றம், மாற்றுத்திறனாளி நல உதவித்தொகை, முதியோர் உதவித்தொகை, விதவை உதவித்தொகை, குடிநீர் வசதி, சாலை வசதி உள்ளிட்ட பல்வேறு நலத்திட்ட உதவிகள் கோரி 575 கோரிக்கை மனுக்கள் இன்று பெறப்பட்டது. பொதுமக்களிடமிருந்து பெறப்பட்ட அனைத்து கோரிக்கை மனுக்கள் மீது விரைந்து தீர்வு காணுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் துறைசார்ந்த அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்கள். அதனைத்தொடர்ந்து தோட்டக்கலைத்துறை சார்பில் தேசிய தோட்டக்கலை இயக்கம் 2024-2025 இயந்திரமயமாக்குதல் திட்டத்தின் கீழ் 1 பயனாளிக்கு ரூ.1.13 லட்சம் மானியத்தில் விசை உழுவை இயந்திரந்தினை வழங்கினார்கள். நடைபெற்ற கூட்டத்தில் தனித்துணை ஆட்சியர் (சமூக பாதுகாப்பு திட்டம்) சேக் அப்துல் காதர், தோட்டக்கலைத்துறை துணை இயக்குநர் ஷீலா ஜாண், துறை அலுவலர்கள், பொதுமக்கள் உட்பட பலர் கலந்துகொண்டார்கள்.

# IPL 2025 Squads: Full team lists, injured players and replacements for Indian Premier League 18 season

New Delhi, March 12-

The Indian Premier League (IPL) 2025 season is set to get underway on March 22 with defending champions Kolkata Knight Riders taking on Royal Challengers Bengaluru in the tournament opener at the Eden Gardens in Kolkata. As the 10-team tournament returns for its 18th season after massive squad overhauls following the IPL Mega Auction last November, the franchises will be scrambling to unlock new combinations to win the coveted tites.

Several teams have also been hit with injury concerns, including the likes of India seam spearhead Jasprit Bumrah who are hoping to chart their comeback from long layoffs through the IPL 2025 season.

Here is a look at all IPL 2025 squads, injured players and replacements

Chennai Super Kings: CSK IPL 2025 squad: Ruturaj Gaikwad (c), MS Dhoni, Ravindra Jadeja, Shivam Dube, Matheesha Pathirana, Noor Ahmad, Ravichandran Ashwin, Devon Conway, Syed Khaleel Ahmed, Rachin Ravindra, Rahul Tripathi, Vijay Shankar, Sam Curran, Shaik Rashid, Anshul Kamboj, Mukesh Choudhary, Deepak Hooda, Gurjanpreet Singh, Nathan Ellis, Jamie Overton, Kamlesh Nagarkoti, Ramakrishnan Ghosh, Shreyas Gopal, Vansh Bedi, Andre Siddarth.

Delhi Capitals: DC IPL 2025 squad: KL Rahul, Jake Fraser-McGurk, Karun Nair, Abhishek Porel, Tristian Stubbs, Axar Patel, Kuldeep Yadav, T Natrajan, Mitchell Starc, Sameer Rizvi, Ashutosh Sharma, Mohit Sharma, Faf du Plessis, Mukesh Kumar, Darshan Nalkande, Vipraj Nigam, Dushmanta Chameera, Donovan Ferreira, Ajay Mandal, Manvanth Kumar, Tripurana Vijay, Madhav Tiwari.

Withdrawn players: Harry Brook.

Gujarat Titans: GT IPL 2025 squad: Shubman Gill (c), Jos Buttler, B. Sai Sudharshan, Shahrukh Khan, Kagiso Rabada, Mohammed Siraj, Prasidh Krishna, Rahul Tewatia, Rashid Khan, Nishant Sindhu, Mahipal Lomror, Kumar Kushagra, Anuj Rawat, Manav Suthar, Washington Sundar, Gerald Coetzee, Mohmmad Arshad Khan, Gurnoor Singh Brar, Sherfane Rutherford, R. Sai Kishore, Ishant Sharma, Jayant Yadav, Glenn Phillips, Kareem Janat, Kulwant Khejroliya.

Kolkata Knight Riders: KKR IPL 2025 squad: Ajinkya Rahane (c), Rinku Singh, Quinton de Kock, Rahmanullah Gurbaz, Angkrish Raghuvanshi, Venkatesh Iyer, Ramandeep Singh, Andre Russell, Anrich Nortje, Harshit Rana, Sunil Narine, Varun Chakaravarthy, Vaibhav Arora, Mayank Markande, Rovman Powell, Manish Pandey, Spencer Johnson, Luvnith Sisodia, Anukul Roy, Moeen Ali, Umran Malik.

Injured players: Umran Malik.

Mumbai Indians: MI IPL 2025 squad: Hardik Pandya (c), Jasprit Bumrah, Rohit Sharma, Tilak Verma, Trent Boult, Naman Dhir, Robin Minz, Karn Sharma, Ryan Rickelton, Deepak Chahar, Will Jacks, Ashwani Kumar, Mitchell Santner, Reece Topley, Shrijith Krishnan, Raj Angad Bawa, Venkat Satyanarayana Raju, Bevon Jacobs, Arjun Tendulkar, Vignesh Puthhur, Suryakumar Yadav.

Injury replacements: Allah Ghazanfar and Lizaad Williams were replaced by Mujeeb-ur-Rahman and Corbin Bosch.

Lucknow Super Giants: LSG IPL 2025 squad: Rishabh Pant (c), David Miller, Aiden Markram, Nicholas Pooran, Mitchell Marsh, Avesh Khan, Mayank Yadav, Mohsin Khan, Ravi Bisnoi, Abdul Samad, Aryan Juyal, Akash Deep, Himmat Singh, M Siddharth, Digvesh Singh, Shahbaz Ahmed, Akash Singh, Shamar Joseph, Prince Yadav, Yuvraj Chaudhary, Rajvardhan Hangargekar, Arshin Kulkarni, Matthew Breetzke.

Injured players: Mitchell Marsh, Mayank Yadav

Punjab Kings: PBKS IPL 2025 squad: Shreyas Iyer (c), Yuzvendra Chahal, Arshdeep Singh, Marcus Stoinis, Glenn Maxwell, Shashank Singh, Prabhsimran Singh, Harpreet Brar, Vijaykumar Vyshak, Yash Thakur, Marco Jansen, Josh Inglis, Lockie Ferguson, Azmatullah Omarzai, Harnoor Pannu, Kuldeep Sen, Priyansh Arya, Aaron Hardie, Musheer Khan, Suryansh Shedge, Xavier Bartlett, Pyla Avinash, Pravin Dubey, Nehal Wadhera.

Injured players: Lockie Ferguson

Rajasthan Royals: RR IPL 2025 squad: Sanju Samson (c), Yashasvi Jaiswal, Riyan Parag, Dhruv Jurel, Shimron Hetmyer, Sandeep Sharma, Jofra Archer, Wainindu Hasaranga, Maheesh Theekshana, Akash Madhwal, Kumar Kartikeya Singh, Nitish Rana, Tushar Deshpande, Shubham Dubey, Yudhvir Charak, Fazal Farooqi, Vaibhav Suryavanshi, Kwena Maphaka, Kunal Rathore, Ashok Sharma.

Royal Challengers Bengaluru: RCB IPL 2025 squad:Rajat Patidar (c), Virat Kohli, Yash Dayal, Josh Hazlewood, Phil Salt, Jitesh Sharma, Liam Livingstone, Rasikh Dar, Suyash Sharma, Krunal Pandya, Bhuvneshwar Kumar, Swapnil Singh, Tim David, Romario Shepherd, Nuwan Thushara, Manoj Bhandage, Jacob Bethel, Devdutt Padikkal, Swastik Chhikara, Lungi Ngidi, Abhinandan Singh, Mohit Rathee.

Injured players: Josh Hazlewood

SunRisers Hyderabad: SRH IPL 2025 squad: Pat Cummins (c), Travis Head, Abhishek Sharma, Heinrich Klassen, Nitish Reddy, Ishan Kishan, Mohammad Shami, Harshal Patel, Rahul Chahar, Adam Zampa, Atharva Taide, Abhinav Manohar, Simarjeet Singh, Zeeshan Ansari, Jaydev Unadkat, Kamindu Mendis, Aniket Verma, Eshan Malinga, Sachin Baby.

Injured players and replacements: Pat Cummins; Wiaan Mulder for Brydon Carse.

# காசி விஸ்வநாதர் கோயிலில் மாசிமக தீர்த்தவாரி 10 ஆயிரம் பக்தர்களுக்கு அன்னதானம்

## எதிர்க்கட்சித் தலைவர் சிவா வழங்கினார்



**புதுச்சேரி, மார்ச் 12-**

புதுச்சேரி மாநிலம் வில்லியனூர் தொகுதி ஒதியம்பட்டு அருள்மிகு ஸ்ரீ காசி விசாலாட்சி சமேத ஸ்ரீ காசி விஸ்வநாதர் கோயிலில் மாசிமக தீர்த்தவாரி இன்று வெகு விமர்சியாக கொண்டாடப்பட்டது.

மாசிமக தீர்த்தவாரி விழாவில், தொகுதி சட்டமன்ற உறுப்பினரும், சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவருமான சிவா கலந்து கொண்டு தீர்த்தவாரிக்கு வருகை புரிந்த உற்சவ மூர்த்தி சுவாமிகளை வரவேற்று சுவாமி தரிசனம் செய்தார்.

தொடர்ந்து, மாசிமக தீர்வாரிக்கு வருகை புரிந்த பக்தர்கள் மற்றும் பொதுமக்கள் என 10 ஆயிரம் பேருக்கு அன்னதானம் வழங்கினார். இந்த நிகழ்ச்சியில், திமுக தொகுதி செயலாளர்கள் மணிகண்டன், சக்திவேல், தலைமை செயற்குழு உறுப்பினர் சண். குமரவேல், பொதுக்குழு உறுப்பினர்கள் ராமசாமி, செல்வநாதன், இலக்கிய அணி அமைப்பாளர் சீனு மோகன்தாசு, வர்த்தக அணி அமைப்பாளர் ரமணன், வர்த்தகர் அணி துணைத் தலைவர் குரு என்கிற சண்முகசுந்தரம், ஆதிதிராவிடர் அணி அமைப்பாளர் செல்வநாதன், தொமுச தலைவர் அங்காளன், இலக்கிய அணி துணை அமைப்பாளர் தர்மன், ஆதிதிராவிடர் அணி துணை அமைப்பாளர்கள் காளி, தெய்வேந்திரன், தொகுதி துணைச் செயலாளர்கள் ஜெகன்மோகன், ஹரி கிருஷ்ணன், தொகுதி செயற்குழு உறுப்பினர்கள் சுப்பிரமணியன், ஏழுமலை, மற்றும் சபரிநாதன், ராஜி, மிலிட்டரி முருகன், சேகர், காசிநாதன், கார்த்திகேயன், மந்திரி குமார், மனோகர், மூர்த்தி, முத்து, அன்பு, அஞ் சாபுலி, பரதன், தயாளன், முருகன், பாலு, ரகு, சந்தோஷ், மகேஷ், சூர்யா, கோபி, ராமஜெயம் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர்.

# கர்ப்பிணி பெண்களுக்கு சீர்வரிசை வழங்கும் நிகழ்ச்சி



**கோவை, மார்ச் 12-**

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு கோவை குனியமுத்தூர் பகுதி 88வது வார்டில் தமிழக வெற்றி கழகம் மகளிரணி சார்பாக கர்ப்பிணி பெண்களுக்கு சீர்வரிசை வழங்கும் நிகழ்ச்சி வடக்கு புறநகர் மாவட்ட செயலாளர் ராஜ்குமார் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் வடக்கு மாவட்ட இணைச் செயலாளர் பூ மார்க்கெட் சரவணன், பகுதி செயலாளர் பைசல், வார்டு செயலாளர்கள் ரகுமான், செந்தில்குமார், 88து வார்டு நிர்வாகிகள் நவீன் ராஜ், ராமலிங்கம், செந்தில்குமார், மந்திரி குமார் நவாஸ், கார்த்தி, விக்கி, வினித், சஜித், முத்துப்பாண்டி, சிவா, ஆர். எஸ்.புரம் பகுதி மகேஷ் குமார், கணேஷ் குமார், தமிழரசன், வெங்கடேஷ் பிரபு கிஷோர், 86வது வார்டு சிவா, ரகுமான் மற்றும் மாவட்ட நிர்வாகிகள், மகளிர் அணியினர் மற்றும் தொண்டர்கள், பொதுமக்கள் உட்பட ஏராளமானோர் கலந்துகொண்டனர்.

# அனைத்து கட்சி ஆலோசனைக் கூட்டம்



**திருவண்ணாமலை, மார்ச் 12-**

திருவண்ணாமலை மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் அமைந்துள்ள மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் வைக்கப்பட்டுள்ள இயந்திரக்கிடங்கினை மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் தர்ப்பகராஜ், திருவண்ணாமலை மாவட்டத்தின் அனைத்து அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியின் பிரமுகர்கள் முன்னிலையில் திறந்து மார்ச் 2025 மாதத்திற்கான காலாண்டு ஆய்வு மேற்கொண்டார்.

இதனை தொடர்ந்து திருவண்ணாமலை மாவட்டத்தின் அனைத்து அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியின் பிரமுகர்களுடன் மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் தர்ப்பகராஜ் தலைமையிலான ஆலோசனைக் கூட்டமும் நடைபெற்றது.

இந்நிகழ்வில் மாவட்ட ஆட்சித்தலைவரின் நேர்முக உதவியாளர் (தேர்தல்) குமரன், வட்டாட்சியர் (தேர்தல்) மற்றும் அனைத்து அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியின் பிரமுகர்கள் கலந்து கொண்டனர்.

# 682 பயனாளிகளுக்கு ரூ.3.59 கோடி மதிப்பில் அரசு நலத்திட்ட உதவிகள்

## அமைச்சர் சி.வெ.கணேசன் வழங்கினார்



கடலூர், மார்ச் 12-

"மக்களுடன் முதல்வர்" திட்டத்தின் கீழ் 3ஆம் கட்ட சிறப்பு முகாம்களை தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி.வெ.கணேசன் துவக்கி வைத்து, 682 பயனாளிகளுக்கு ரூ.3.59 கோடி மதிப்பீட்டிலான அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்

கடலூர் மாவட்டம், திட்டக்குடி வட்டத்திற்குட்பட்ட இறையூர் காலனி, தொளார் காலனி, கொடிக்களம் காலனி, ஆவினங்குடி காலனி, ஆதமங்கலம் (சாத்தநத்தம் காலனி) ஆகிய இடங்களில் நடைபெற்ற "மக்களுடன் முதல்வர்" திட்டத்தின் கீழ் 3ஆம் கட்ட சிறப்பு முகாம்களை தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை அமைச்சர் சி.வெ.கணேசன் துவக்கி வைத்து, 682 பயனாளிகளுக்கு ரூ.3.59 கோடி மதிப்பீட்டிலான அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினர்.

தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை அமைச்சர் தெரிவித்ததாவது, தமிழ்நாடு முதலமைச்சர் ஆட்சி பொறுப்பேற்றதுமுதல் பல்வேறு திட்டங்களை அறிமுகப்படுத்தி செயல்படுத்தி வருகிறார்கள். குறிப்பாக பெண் குழந்தைகள் படித்தால் தான் ஒரு குடும்பம் முன்னேறும், ஒரு குடும்பம் முன்னேறினால் ஊர் முன்னேறும், ஊர் முன்னேறினால் நாடு முன்னேறும் என்பதை நன்கறிந்து அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் படிக்கும் மாணவிகளின் உயர்கல்வியை ஊக்குவிப்பதற்காக புதுமைப்பெண் திட்டத்தினை துவக்கிவைத்ததன் மூலம் மாதந்தோறும் ரூ.1,000 மாணவிகளின் வங்கி கணக்கில் வழங்கப்பட்டு வருகிறது. அதுமட்டுமன்றி அரசு பள்ளிகளில் படிக்கும் மாணவர்களின் உயர்கல்வியை ஊக்குவிப்பதற்காக மாதம் ரூ.1,000 வழங்கும் தமிழ்ப்புதல்வன் திட்டத்தினையும் செயல்படுத்தி வருகிறார்கள்.

தமிழ்நாடு முதலமைச்சர் தமிழ்நாட்டில் அன்றாடம் அரசு துறைகளை அனுகும் பொதுமக்களுக்கு அரசு அலுவலர்கள் வழங்கும் சேவைகளை எளிமைப்படுத்தும் வகையிலும், அரசின் சேவைகள் விரைவாகவும், எளிதாகவும் பொதுமக்களுக்கு சென்று சேரும் வண்ணம் "மக்களுடன் முதல்வர்" என்ற சிறப்பு திட்டத்தினை தொடங்கி வைத்ததை தொடர்ந்து, கடலூர் மாவட்டத்தில் 18.12.2023 முதல் 06.01.2024 வரை நகர்ப்புற பகுதிகளில் 60 முகாம்களும், 11.07.2024 முதல் 31.08.2024 வரை ஊரக பகுதிகளில் 91 முகாம்களும் நடத்தப்பட்டுள்ளது.

தமிழ்நாடு முதலமைச்சர் "மக்களுடன் முதல்வர் முகாம் 3ஆம் கட்டம்" என்ற சிறப்புத்திட்டத்தினை ஊரகப்பகுதிகளில் பொதுமக்கள் பயன்பெறும் வகையில் அறிமுகப்படுத்தியுள்ளார். இத்திட்டத்தில் மக்கள் இருக்கும் இடங்களிலேயே அனைத்து துறை அலுவலர்களுடன் முகாம்களை நடத்தி பொதுமக்களிடமிருந்து மனுக்களை பெற அரசினால் அறிவிக்கப்பட்டுள்ளதை தொடர்ந்து கடலூர் மாவட்டத்தில் 9 சட்ட மன்ற தொகுதிகளிலும் முகாம்கள் நடைபெற்று வருகிறது. மேலும், மூன்றாம் கட்டமாக தினந்தோறும் வேலைசெய்யும் கூலி தொழிலாளிகள், பொதுமக்கள் இம்முகாம்களில் கலந்துகொண்டு முதலமைச்சரின் காப்பீட்டு அட்டை, குடும்ப அட்டை மற்றும் ஆதார் அட்டை திருத்தங்கள், உதவித்தொகை விண்ணப்பங்கள் உள்ளிட்ட பல்வேறு மனுக்களை அளித்து பயனடையலாம் என தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட வருவாய் அலவலர் ம. ராஜசேகரன், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் கூடுதல் ஆட்சியர் இரா.சரண்யா, கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர் இளஞ்செல்வி, மாற்றுத்திறனாளி நல அலுவலர் பாபு, தாட்கோ அலுவலர் லோகநாதன், உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) விருத்தாசலம் முருகன், விருத்தாசலம் வருவாய் வட்டாட்சியர் உதயகுமார், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

# வேலூர் தொகுதியில் 70 பயனாளிகளுக்கு ரூ.26.64 லட்சம் மதிப்பில் நலத்திட்ட உதவி வழங்கல்



நாமக்கல், மார்ச் 12-

நாமக்கல் மாவட்டம், பரமத்திவேலூர் சட்டமன்ற தொகுதி, எலச்சிபாளையம் ஊராட்சி ஒன்றியம், பெரியமணலி மற்றும் மாவுரெட்டிபட்டி ஊராட்சிகளில் ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன் மக்களுடன் முதல்வர் மூன்றாம் கட்ட சிறப்பு முகாம்களில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் கே.எஸ். மூர்த்தி அவர்கள் முன்னிலையில் பொதுமக்களிடம் கோரிக்கை மனுக்களை பெற்றுக்கொண்டு 70 பயனாளிகளுக்கு ரூ.26.64 மதிப்பில் அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

இம்முகாமில் ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன் தெரிவித்ததாவது, தமிழ்நாடு முதலமைச்சர் பொதுமக்கள் அரசுத்துறைகளை தேடி வந்து மனுக்களை அளித்த நிலையை மாற்றி அரசுத்துறை அலுவலர்கள் பொதுமக்களை நேரடியாக சந்தித்து அவர்களது கிராமங்களுக்கே சென்று மனுக்களை பெற்று தீர்வு வழங்கி வருகின்றார்கள். ஏழை, எளிய மக்களுக்கு தேவையான அடிப்படை வசதிகளை பூர்த்தி செய்திடும் வகையிலும், வாழ்க்கை தரத்தை உயர்த்திடும் வகையிலும், அவர்களுக்கு உரிய காலத்தில் அனைத்தும் கிடைக்க வேண்டும் என்ற நோக்கத்தில் பல்வேறு திட்டங்களை தொடர்ந்து செயல்படுத்தி வருகின்றார்கள். பொதுமக்களின் கோரிக்கைகள், மனுக்கள் மற்றும் அடிப்படை வசதிகளை நிறைவேற்றிடவும், அரசின் சேவைகள் விரைவாகவும் எளிதாகவும் சென்று சேரும் வகையிலும், "மக்களுடன் முதல்வர்" என்ற திட்டத்தை தொடங்கி வைத்தார்கள். தற்போது, ஏழை, எளிய மக்களின் குறைகளை நிறைவேற்ற சிறப்பு கவனம் செலுத்திட மூன்றாம் கட்டமாக முகாம்கள் நடத்திட உத்தரவிட்டுள்ளார்கள்.

அதன்படி, பொதுமக்கள் அதிகளவில் அணுகும் வருவாய்துறை, ஊரக வளர்ச்சித்துறை, சமூக நலத்துறை, மாற்றுத்திறனாளிகள் நலத்துறை, வேளாண்மைத்துறை, ஆதிதிராவிடர் நலத்துறை உள்ளிட்ட 15 அரசு துறைகள் சார்ந்த 44 வகையான சேவைகள் வழங்கும் வகையில் சிறப்பு முகாம்கள் பொதுமக்களின் இருப்பிடத்திற்கு அருகிலேயே நடத்தப்படுகிறது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆட்சிப்பொறுப்பேற்ற 4 ஆண்டுகளில் பொதுமக்களின் தேவைகளை பூர்த்தி செய்திட பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகின்றார்கள். இத்திட்டங்கள் அனைத்தும் மாதந்தோறும் ரூ.2,000 முதல் ரூ.3,000 வரை சேமிக்க கூடிய திட்டங்கள் ஆகும். குறிப்பாக பேருந்துகளில் விடியல் பயண திட்டத்தின் மூலம் மாதந்தோறும் சுமார் ரூ.800 வரை சேமிக்க முடிகிறது. மகளிர் உரிமைத்தொகை திட்டத்தின் கீழ் மாதந்தோறும் ரூ.1,000 மற்றும் புதுமைப்பெண், தமிழ்புதல்வன் திட்டங்கள் மூலம் மாதம் ரூ.1,000 உள்ளிட்ட சிறப்பு வாய்ந்த திட்டங்களை செயல்படுத்தி வருகின்றார்கள்.

நாமக்கல் மாவட்டத்தில் கடந்த 2021 முதல் 2025 வரை கலைஞர் கனவு இல்லம், ஊரக வீடுகள் பழுது பராமரிப்பு திட்டம், பிரதான் மந்திரி கிராம குடியிருப்பு திட்டம், சாலை பணிகள், குடிநீர் திட்ட பணிகள், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டம், சிறுபாலம் அமைத்தல், சுகாதார பணிகள், தடுப்பணை, விளையாட்டு மைதானம் அமைத்தல் உள்ளிட்ட பல்வேறு திட்டங்களின் கீழ் எலச்சிபாளையம் ஊராட்சி ஒன்றியம், பெரிய மணலி ஊராட்சியில் ரூ.3.52 கோடி மதிப்பீட்டில் 157 திட்டப்பணிகள், மாவுரெட்டிப்பட்டி ஊராட்சியில், ரூ.2.38 கோடி மதிப்பீட்டில் 110 திட்டப்பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என தெரிவித்தார்.

தொடர்ந்து, ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன் வருவாய்த்துறை, கூட்டுறவுத்துறை, வேளாண்மை துறை, மாற்றுத்திறனாளிகள் நலத்துறை, மகளிர் திட்டம், தொழிலாளர் நலத்துறை, தோட்டக்கலைத்துறை மற்றும் தாட்கோ உள்ளிட்ட அரசுத்துறைகள் சார்பில் பரமத்தி வேலூர் சட்டமன்ற தொகுதி, எலச்சிபாளையம் ஊராட்சி ஒன்றியம், பெரியமணலியில் 42 பயனாளிகளுக்கு ரூ.16.13 லட்சம் மதிப்பில் அரசு நலத்திட்ட உதவிகள், மாவுரெட்டிப்பட்டில் 28 பயனாளிகளுக்கு ரூ.10.50 லட்சம் மதிப்பில் அரசு நலத்திட்ட உதவிகள் என மொத்தம் 70 பயனாளிகளுக்கு ரூ.26.64 லட்சம் மதிப்பில் அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

இம்முகாம்களில் அட்மா குழுத்தலைவர் மு.தங்கவேல் (எலச்சிபாளையம்), இணைபதிவாளர், கூட்டுறவு சங்கங்கள் க.ப.அருளரசு, முகாம் பொறுப்பு அலுவலர்கள், வட்டாட்சியர்கள், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் உட்பட துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# வன்கொடுமைகள் தடுப்புச் சட்டம் குறித்து விழிப்புணர்வு பயிற்சி



சேலம், மார்ச் 12-

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் சார்பில் வன்கொடுமைகள் தடுப்புச் சட்டம் குறித்து சேலம், நாமக்கல், தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி ஆகிய 4 மாவட்டங்களை உள்ளடக்கிய சேலம் மண்டலத்திற்கான ஒரு நாள் விழிப்புணர்வு பயிற்சி வகுப்பில் மாவட்ட ஆட்சித்தலைவர் பிருந்தாதேவி கலந்துகொண்டார்.

தமிழ்நாடு முதலமைச்சர் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மீதான வன்கொடுமைகளை தடுக்கும் விதமாகவும், பாதிக்கப்பட்டவர்களுக்குத் தேவையான ஆலோசனைகளை வழங்கிடவும் தொழில்நுட்ப வசதியுடன் கூடிய உதவி மையத்தினை செயல்படுத்தி வருகிறார்கள். இது வன்கொடுமையால் பாதிக்கப்படும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மக்களுக்கு ஒரு வழிகாட்டியாக இருந்து வருகிறது.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை மற்றும் சமூக நீதி மற்றும் சமத்துவ மையம் இணைந்து நடத்தும் பட்டியலின மக்கள் மற்றும் பட்டியல் பழங்குடியினர் மீதான வன்கொடுமைகள் தடுப்புச் சட்டம் 1989 மற்றும் விதிகள் 1995 குறித்து சேலம், நாமக்கல், தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி ஆகிய 4 மாவட்டங்களை உள்ளடக்கிய சேலம் மண்டலத்திற்கான ஒரு நாள் பயிற்சி வகுப்பு இன்றையதினம் நடைபெற்றது.

இவ்விழிப்புணர்வு பயிற்சியில் அலுவல் சாரா மாவட்ட விழிப்புணர்வு காண்காணிப்புக்குழு உறுப்பினர்கள், பழங்குடியினர் நல வாரியம், தூய்மைப் பணியாளர் நல வாரியம், புதிரை வண்ணார் நல வாரியம் மற்றும் நரிக்குறவர் நல வாரியம் ஆகிய 4 வாரியங்களைச் சேர்ந்த அலுவல் சாரா உறுப்பினர்கள் ஆகியோருக்கு வன்கொடுமை தடுப்பு, ஆதிதிராவிடர் நலத்துறை திட்டங்கள், தாட்கோ திட்டங்கள், பழங்குடியினர் நலத்திட்டங்கள். ஊரக வளர்ச்சி திட்டங்கள் மற்றும் வன்கொடுமை தடுப்பு உதவி மையம் ஆகியவற்றில் உள்ள அலுவல் சாரா வாரிய உறுப்பினர்களுக்கு விழிப்புணர்வு பயிற்சி வழங்கப்படுகிறது.

இப்பயிற்சியில், வருவாய் கோட்டாட்சியர்கள் அபிநயா (சேலம்), லோகநாயகி (சங்ககிரி), மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் ஜெயக்குமார், தாட்கோ மண்டல மேலாளர் ராமதாஸ், நிகழ்வின் ஒருங்கிணைப்பாளர்கள் முனைவர் ப.சுசீந்திரா, ராயன், தமயந்தி, பழனிசாமி, அலமேலு உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

தினமும் மாலையில் மாலை எக்ஸ்பிரஸ் படியுங்கள்

# சிறுசேமிப்பு திட்டங்களில் சாதனை புரிந்த அஞ்சலக சிறுசேமிப்பு முகவர்களுக்கு பரிசு



சேலம், மார்ச் 12-

சேலம் மாவட்டத்தில் அஞ்சலக சிறுசேமிப்புத் திட்டங்களில் வசூல் செய்து சாதனை புரிந்த அஞ்சலக சிறுசேமிப்பு முகவர்களுக்கு பரிசளிப்பு விழாவில் மாவட்ட ஆட்சித்தலைவர் பிருந்தாதேவி, தலைமையில் மாவட்ட ஆட்சியரகத்தில் ஆட்சித்தலைவர் தெரிவித்ததாவது: சேலம் மாவட்டத்தில் 2020-21 ஆம் நிதியாண்டிற்கான அஞ்சலக சிறுசேமிப்புத் திட்டங்களில் ரூ.1.370.33 கோடியும், 2021-22ஆம் நிதியாண்டிற்கான அஞ்சலக சிறுசேமிப்புத் திட்டங்களில் ரூ.1,342.26 கோடியும், 2022-23ஆம் நிதியாண்டிற்கான அஞ்சலக சிறுசேமிப்புத் திட்டங்களில் ரூ.1,784.99 கோடியும், 2023- 2024ஆம் நிதியாண்டில் ரூ.2.287 கோடியும் மற்றும் நடப்பு 2024-2025ஆம் நிதியாண்டு பிப்ரவரி மாதம் வரை ரூ.2.317.41 கோடி என மொத்தம் கடந்த 5 ஆண்டுகளில் மட்டும் ரூ.9,101.99 கோடி வசூல் சாதனையை சேலம் மாவட்டம் எய்தியுள்ளது. இதில் அஞ்சலக சிறுசேமிப்பு முகவர்களின் சேவை மிகவும் இன்றியமையாததாகும். படித்த கிராமப்புற மற்றும் நகர்ப்புற பெண்கள் மற்றும் ஆண்கள் சுய வேலைவாய்ப்பாக அஞ்சலக சிறுசேமிப்பு முகவர் பணியினை செய்து வருகின்றனர்.

தற்பொழுது 2023-2024 ஆம் நிதியாண்டில் சிறுசேமிப்பு வசூலில் சாதனை புரிந்த அஞ்சலக சிறுசேமிப்பு முகவர்களுக்கு தற்பொழுது பரிசுகள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளது. குறிப்பாக, வேலுமணி என்ற சிறுசேமிப்பு முகவர் அஞ்சலக சிறுசேமிப்புத் திட்டங்களில் ரூ.73,83,39,200 வசூல் சாதனை செய்து, தொடர்ந்து 5 வருடங்களாக மாநில அளவில் முதலிடம் பெற்றுள்ளார். மற்றும் கருப்பூரைச்சேர்ந்த திரு.எஸ்.கோவிந்தசாமி என்ற சிறுசேமிப்பு முகவர் அஞ்சலக சிறுசேமிப்புத் திட்டங்களில் ரூ.23,10,58,000 வசூல் சாதனை செய்து தொடர்ந்து வருடங்களாக மாவட்ட அளவில் முதலிடம் பெற்றுள்ளார்.

மேலும் மாவட்ட அளவில், மாநகராட்சி மண்டல அளவில், நகராட்சி அளவில் மற்றும் ஊராட்சி ஒன்றிய அளவில் சிறுசேமிப்புத் திட்டங்களில் அதிக அளவு வசூல் சாதனை புரிந்த அனைத்து சிறுசேமிப்பு முகவர்களுக்கும் பரிசுகள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளது.

சிறுசேமிப்பு நாட்டிற்கு மட்டுமல்லாது வீட்டின் பொருளாதார வளர்ச்சிக்காகவும் பயன்படுகிறது. எனவே, அஞ்சலக சிறுசேமிப்பின் அவசியத்தினையும், பயன்களையும் பொதுமக்களுக்கு சிறுசேமிப்பு முகவர்கள் எடுத்துச் சொல்லி சிறப்பாக இத்திட்டத்தினை செயல்படுத்தியுள்ளார்கள்.

"இன்றைய சேமிப்பு நாளைய பாதுகாப்பு" என்பதற்கேற்ப எதிர்கால வாழ்க்கை பாதுகாப்பாகவும், இனிமையானதாகவும் அமைந்திட, பெற்றோர்கள் தங்கள் வருமானத்தின் ஒரு பகுதியை தொடர்ந்து சேமிப்பதோடு, தங்கள் பிள்ளைகளுக்கும் சிறுவயது முதலே சேமிப்பின் அவசியத்தை உணர்த்திடும் வகையில் சேமிக்கும் பழக்கத்தினை ஏற்படுத்தி சிக்கனம்" என்னும் அடித்தளத்தின் மீதே சேமிப்பு" எனும் கட்டடத்தை எழுப்ப இயலும் என்பதை உணர்த்திட வேண்டும்.

அதிக வட்டிக்கு ஆசைப்பட்டு, பாடுபட்டு உழைத்து சேமித்த, தங்கள் வருமானத்தை சிட்பண்டு, தனியார் நிதி நிறுவனங்கள் போன்றவற்றில் முதலீடு செய்து ஏமாறாமல் அரசின் பாதுகாப்பான, உத்தரவாதமான அஞ்சலகங்களில் தங்களுக்கேற்ற சிறுசேமிப்புத் திட்டங்களில் முதலீடு செய்து பயன்பெறலாம். இவ்வாறு தெரிவித்தார்.

முன்னதாக, சேலம் மாவட்டத்தில் படித்து வேலைவாய்ப்பற்ற மகளிர்களுக்கு சுய வேலைவாய்ப்பினை வழங்கிடும் பொருட்டு கொளத்தூர் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த கௌசல்யா என்பவருக்கு சிறுசேமிப்பு முகவராக பணி நியமன ஆணை வழங்கப்பட்டது. மேலும், படித்த வேலைவாய்ப்பற்ற மகளிர்கள் சுய வேலைவாய்ப்பாக சிறுசேமிப்பு முகவர் பணி செய்து வருமானம் ஈட்டிடவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

கிராமப்புற மக்களும் சிறுசேமிப்பு திட்டத்தில் இணைத்திட ஏதுவாக ஊராட்சி ஒன்றிய அளவில் ஒவ்வொரு ஊராட்சியிலும் படித்த வேலைவாய்ப்பற்ற மகளிரை அஞ்சலக சிறுசேமிப்பு முகவராக நியமனம் செய்து அவர் மூலமாக சம்மந்தப்பட்ட ஊராட்சியில் பணிபுரியும் அனைத்து 100 நாள் வேலை பணியாளர்கள் மற்றும் பொதுமக்களையும் அஞ்சலக ஆர்.டி சேமிப்பு கணக்கை துவக்கி பராமரிக்கவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக சிறுசேமிப்புத் துறை அலுவலர்கள் தெரிவித்தனர்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) நே. பொன்மணி, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (சிறுசேமிப்பு) முரளிதரன் உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் மற்றும் சிறுசேமிப்பு முகவர்கள் கலந்துகொண்டனர்.

E-mail:maalaiexpresspdy@gmail.com
● புதன் ● மார்ச் 12, 2025
மாலை எக்ஸ்பிரஸ்

# மாற்றுத்திறனாளிகள் சிரமம் அறிந்து சக்கர நாற்காலி வழங்கிய முதல்வர்

## கோவை மாவட்ட பயனாளிகள் நெஞ்சார்ந்த நன்றி



**கோவை, மார்ச் 12-**

தமிழ்நாடு முதலமைச்சர் மாற்றுத்திறனாளிகளின் நலனுக்காக பல்வேறு நலத்திட்டங்களை சிறப்பாக செயல்படுத்தி வருகின்றார்கள். குறிப்பாக குழந்தைப் பருவத்தில் அவர்களது குறைபாட்டினை ஆரம்ப நிலையிலேயே கண்டறிந்து, அவர்களுக்கு மருத்துவம் மற்றும் மறுவாழ்வு பயிற்சிகளை அளிக்க அரசின் பன்னிரெண்டு துறைகளின் சேவைகளை ஒருங்கிணைத்து நிலையான வழிகாட்டு நெறிமுறைகள் வெளியிடப்பட்டு, அதனை செயல்படுத்த உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

கோயம்புத்தூர் மாவட்டத்தில் மாற்றுத்திறனாளிகள் நலத்துறை மூலம் மாற்றுத்திறனாளிகள் நலனுக்காக அரசு பல்வேறு நலத்திட்டங்கள் செயல்படுத்தி வருகிறது. இதில் மாற்றுத்திறனாளிகள் நலத் துறையின் சார்பில் இணைப்பு சக்கரம் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர், பேட்டரி வீல் சேர், மூன்று சக்கர சைக்கிள், மோட்டார் பொருந்திய தையல் இயந்திரம், தேசிய அடையாள அட்டை, மாதாந்திர பராமரிப்பு உதவித்தொகை, வங்கி கடன் மானியம், இலவச பேருந்து பயணம், காதொலிக் கருவி, பார்வையற்றோர்களுக்கு உருப்பெருக்கி, அலைப்பேசி மற்றும் கல்வி உதவித்தொகைகள் உள்ளிட்ட பல்வேறு அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

கோயம்புத்தூர் மாவட்டத்தில் கடந்த 4 ஆண்டுகளில் மாற்றுத்திறனாளிகள் நலத்துறை சார்பில் சிறுகுறு தொழில் வங்கிக்கடன் மான்யம் வழங்கும் திட்டத்தின் கீழ் 116 மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ.32.29 லட்சம் மதிப்பிலான வங்கிக்கடன் மானியமும், அனைத்து வகையான மாற்றுத்திறனாளிகளுக்கான திருமண நிதி உதவி வழங்கும் திட்டத்தின் கீழ் 50 மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ.22.50 லட்சம் மதிப்பில் திருமண நிதி உதவிகளும், ஆவின் நிறுவனத்தின் பால் உற்பத்தி பொருட்கள் விற்பனை மையம் அமைக்க 14 பயனாளிகளுக்கு ரூ.6 லட்சம் மதிப்பிலான நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளது.



மாற்றுத்திறனாளிகளுக்கு சக்கர நாற்காலி வழங்கும் திட்டத்தின் கீழ் 70 பயனாளிகளுக்கு ரூ.6.42 லட்சம் மதிப்பிலான சக்கர நாற்காலிகளும், இணைப்பு சக்கரம் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர் வழங்கும் திட்டத்தின் கீழ் 493 பயனாளிகளுக்கு ரூ.4.83 கோடி மதிப்பிலான பெட்ரோல் ஸ்கூட்டர்களும், பிரத்தியோகமாக வடிவமைக்கப்பட்ட இணைப்புச்சக்கரம் சக்கரம் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர் வழங்கும் திட்டத்தின் கீழ் 11 பயனாளிகளுக்கு ரூ.2.31 லட்சம் மதிப்பிலான பெட்ரோல் ஸ்கூட்டர்களும், முதுகு தண்டுவடம் பாதிக்கப்பட்ட மாற்றுத்திறனாளிகளுக்கு பேட்டரியால் இயங்கும் சக்கர நாற்காலி வழங்கும் திட்டத்தின் கீழ் 57 பயனாளிகளுக்கு ரூ.60.84 லட்சம் மதிப்பிலான பேட்டரியால் இயங்கும் சக்கர நாற்காலிகளும் வழங்கப்பட்டுள்ளது.



மேலும், திறன் பேசிகள் வழங்கும் திட்டத்தின் கீழ் 817 பயனாளிகளுக்கு ரூ.4.38 கோடி மதிப்பிலான திறன் பேசிகளும், காதொலிக்கருவி வழங்கும் திட்டத்தின் கீழ் 400 பயனாளிகளுக்கு ரூ.13.14 இலட்சம் மதிப்பிலான காதொலிக்கருவி களும், பராமரிப்பு உதவித்தொகை வழங்கும் திட்டத்தின் கீழ் 8373 மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ.1.67 கோடி மதிப்பிலான பராமரிப்பு உதவித்தொகை களும், கல்வி உதவித்தொகை மற்றும் வாசிப்பாளர் உதவித்தொகை வழங்கும் திட்டத்தின் கீழ் 2336 மாணவ, மாணவியர்களுக்கு ரூ.68.60 லட்சம் கல்வி உதவித்தொகையும், இதர உதவி உபகரணங்கள் வழங்கும் திட்டத்தின் கீழ் 155 பயனாளிகளுக்கு ரூ.3.85 இலட்சம் மதிப்பிலான நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளது.

கோயம்புத்தூர் மாவட்டம், போத்தனூர், கோனவாய்க் கால்பாளையம் பகுதியை சேர்ந்த தசைச் சிதைவு நோய் மற்றும் முதுகுதண்டுவடத்தால் பாதிக்கப்பட்ட மாற்றுத்திறனாளி பாக்கியலட்சுமி என்பவர் பிரத்யேகமாக வடிவமைக்கப்பட்ட பேட்டரியால் இயங்கும் சக்கர நாற்காலியினை பெற்று நிறைந்த மனதுடன் மகிழ்ச்சியாக தெரிவித்த தாவது: நான் போத்தனூர், கோனவாய்க்கால்பாளையம் பகுதியில் வசித்து வருகிறேன். எனக்கு வயது 37. திருமணம் ஆகவில்லை. பி.ஏ பொலட்டிக்கல் சயின்ஸ் படித்துள்ளேன். எனக்கு 10 வருடங்களுக்கு முன்னர் தசைச் சிதைவு நோயால் கை மற்றும் கால்கள் பாதிக்கப்பட்டு, நடக்கமுடியாமல் போனது. என்னுடைய வயதான அம்மா தான் என்னை கவனித்து வருகின்றார்கள். வெளியில் எங்கும் செல்லமுடியாத சூழலில் இருந்தேன்.

எனக்கு மாற்றுத்திறனாளிகள் நல அலுவலகம் மூலம் முதலில் வழங்கப்பட்ட மூன்று சக்கர சைக்கிள் பயன்படுத்தி எனது அம்மா அழைத்து செல்வார்கள். அதுவும் எனக்கு சிரமமாக இருந்தது, அம்மாவுக்கு சிரமம் கொடுக்காமல், நானே சுயமாக வெளியே சென்று வர வேண்டும். வேலைக்கும் போகவேண்டும் என்று நினைத்து கொண்டிருந்த போதுதான் பேட்டரியால் இயங்கும் சக்கர நாற்காலி வழங்குவது குறித்து அறிந்து கொண்டு மாற்றுத்திறனாளிகள் நல அலுவலகத்தில் விண்ணப்பித்தேன்.

அதனைத்தொடர்ந்து, மாற்றுத் திறனாளிகள் நலத்துறையின் சார்பில், எனக்கு பிரத்யேகமாக வடிவமைக்கப்பட்ட பேட்டரியால்



இயங்கும் சக்கர நாற்காலி வழங்கப்பட்டது. நான் தமிழ்நாடு அரசால் வழங்கப்படும் மாற்றுத்திறனாளிகளுக்கான மாதாந்திர பராமரிப்பு உதவித்தொகை ரூ.2000 பெற்று வருகின்றேன். இந்த உதவித்தொகை எனக்கு மிகவும் உதவிகரமாக இருகின்றது. இத்திட்டங்களை வழங்கிய தமிழ்நாடு முதலமைச்சருக்கு நானும், என் அம்மாவும் எங்களுடைய மனமார்ந்த நன்றியை தெரிவித்துக்கொள்கிறோம் என தெரிவித்தனர்.

தொகுப்பு:-
**செந்தில் அண்ணா**
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
**கிமோகன்ராஜ்**
உதவி மக்கள் தொடர்பு அலுவலர்,
கோயம்புத்தூர் மாவட்டம்.

## திட்டப்பணிகள் குறித்து ஆய்வுக்கூட்டம்



**வேலூர் மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் வளர்ச்சி மற்றும் திட்டப்பணிகள் குறித்து அனைத்துதுறை அலுவலர்களுடனான ஆய்வுக்கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் சுப்புலெட்சுமி தலைமையில் ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் நடைபெற்றது.**

## மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம்



**நாமக்கல், மார்ச் 12-**


நாமக்கல் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் மாவட்ட ஆட்சித்தலைவர் மருத்துவர் உமா தலைமையில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நடைபெற்றது.

மக்கள் குறைத்தீர்க்கும் நாள் கூட்டத்தில் முதியோர் உதவித்தொகை, விதவை உதவித்தொகை, கல்வி உதவித்தொகை, இலவச வீட்டு மனைப்பட்டா, வங்கி கடன் உதவி, குடிசை மாற்று வாரிய வீடு, குடிநீர் வசதி, சாலை வசதி உள்ளிட்ட அடிப்படை வசதிகள் வேண்டி பல்வேறு கோரிக்கைகள் குறித்து மொத்தம் 340 மனுக்களை மாவட்ட ஆட்சித்தலைவரிடம் பொதுமக்கள் வழங்கினார்கள். மனுக்களைப் பெற்று கொண்ட மாவட்ட ஆட்சித்தலைவர் மனுக்களை பரிசீலினை செய்து உரிய அலுவலர்களிடம் வழங்கி அவற்றின் மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமென அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.

தொடர்ந்து, மாற்றுத்திறனாளிகள் நலத்துறை சார்பில், குமாரபாளையம், கிழக்கு காலனியை சார்ந்த தியாகராஜன் அவர்களது மகன் விஸ்வக் ஆதித்யா அவர்களுக்கு ரூ.2,780 மதிப்பில் காதொலி கருவியை மாவட்ட ஆட்சித்தலைவர் வழங்கினார்.

இந்நிகழ்வில் மாவட்ட வருவாய் அலுவலர் மருத்துவர் ரெ.சுமன், தனித்துணை ஆட்சியர் (சமூக பாதுகாப்புத் திட்டம்) பிரபாகரன், மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர் முருகன் உட்பட துறை சார்ந்த அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

OWNER Dr.K.SAKTHIVEL. M.B.A., Ph.D., M.A., M.phil., (JMC) PRINTER I. MANOHARAN, PUBLISHER Dr.K.SAKTHIVEL PUBLISHED FROM No.159, First Floor, Mission St, Puducherry - 605 001 AND PRINTED FROM SENTHIL ANDAVAR OFFSET PRINTERS, No.5, THENGAITITTU ROAD, MUDALIYARPET, PUDUCHERRY - 605 005 . EDITOR Dr.K. SAKTHIVEL E-mail:maalaiexpresspdy@gmail.com, Website: www.maalaiexpress.com Ph : 0413-2226989, 9842335007



# அரசு, அரசு உதவி பெறும் பள்ளி மாணவர்களுக்கு மாலை சிற்றுண்டி புதுச்சேரி பட்ஜெட்டில் அறிவிப்பு

# 21 மாவட்டங்களுக்கு மழைக்கு வாய்ப்பு

# திருச்செந்தூரில் மாசி மகம் தேரோட்டம் கோலாகலம்




# மாலை எக்ஸ்பிரஸ்



Email: maalaiexpresspdy@gmail.com

Website: www.maalaiexpress.com



• 12-3-2025 புதன்கிழமை • பக்கம் 8 • ரூ.600 காசுகள்